விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 20.04.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 140 | பக்கங்கள் : 16

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் இரு ஆண்டு நிறைவு நாளை

### 2 நிமிட மௌன அஞ்சலிக்கு அழைப்பு

கொழும்பு, ஏப்ரல் 20

உயிர்த்த ஞாயிறு தாக்கு தல்களில் உயிரிழந்தவர்களுக் காக நாளை 21 ஆம் திகதி காலை 08.45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று

15

## வடக்கு முதலமைச்சர் வேட்பாளர்: ஏனைய கட்சிகளுடன் பேசியே முடிவு!

### மாவை சேனாதிராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 20

வடக்கு முதலமைச்சர் வேட்பாள ராக யாரை நியமிப் பது என்பது தொடர்பில், தற்போதைய நிலையில் பல கட்சிகள், தற்போதைய அரசாங் கத்தின் நிலைமை போன்றவற்றைப் பரிசீலித்து ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி அதற்கு தகுந்த முடிவை நாங்கள் எடுப்போம் - என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி யின் தலைவர் மாவை. சேனாதிராசா.

வடக்கு முதலமைச்சர் வேட்பா ளர் பதவிக்கு மாவை சேனாதி ராசா தகுதியற்றவர் என்று

15

# தோல்வியில் முடிவடைந்த மஹிந்த நடத்திய சந்திப்பு!

## விமல், வாசுதேவ, கம்மன்பில வெளிநடப்பு

கொழும்பு, ஏப்ரல் 20

**ஆளும் சிறிலங்கா பொதுஜன முன்னணி கூட்டணியின் பங்காளிக் கட்சிகளிடையே ஏற்பட்ட குழப்பத்தைத் தணிக்கும் விதத்தில் நேற்று முற்பகல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடிய விசேட கூட்டம் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

பல்வேறு சிறிய கட்சிகளையும் சேர்ந்த பல டசின் பிரதிநிதிகளை இந்தக் கூட்டத்துக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ கூட்டி வந்தமையால், பிரதான கூட்டத்தில் பங்குபற்றாமல் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ (தேசிய சுதந்திர முன்னணி), உதய கம்மன்பில (புதிய ஹெல உறுமய), வாசுதேவ நாணயக்கார (ஜனநாயக இடதுசாரி முன்னணி) போன் றோர் வெளியேறியமையால்

15



## செவ்வாய்க் கிரகத்தில் ஹெலி வெற்றிகரமாக பறந்து சாதனை

புளோரிடா, ஏப். 20

'புத்திக்கூர்மை' (ingenuity) ஹெலிக்கொப்ரர் அதன் முதலாவது பரீட்சார்த்தப் பறப்பை வெற்றி கரமாக நிறைவு செய்துள்ளதாக அமெரிக்க விண் வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா அறிவித்தி ருக்கிறது.

செவ்வாய் தரையில் இருந்து கிளம்பிப் பறந்து மீண்டும் குறிப்பிட்ட இடத்தில்

15

## மாகாண சபைத் தேர்தல்களை 6 மாதத்துக்குள் நடத்த முடியும்

### அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை

கொழும்பு, ஏப் 20.

"மாகாண சபைகளுக்கான தேர்தல் முறை என்ன என்பதை அனைத்துக் கட்சிகளிடமும் நாங்கள் கோரவுள்ளோம். அதன் பின்னரே வரைபாக பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். அந்த வகையில் இன்னும் 06 மாதங்களிற்குள் இந்த தேர் தலை நடத்த எதிர்பார்க்கின் றோம்" எனத் தெரிவித்தி ருக்கின்றார் கல்வி

02

## அழுத்தியுரைத்த கருத்துக்களை அடியோடு மறுதலித்த கர்தினால்!

கொழும்பு, ஏப்.20

நேற்று முன்தினம் கூறிய கருத்தில் இருந்து 180 பாகைக்கு மீளத் திரும்பியவராக, 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தற் கொலைத்தாக்குதல்கள் அரசி யல் ஆதாயம் தேடும் நோக்கு டன் நடத்தப்பட்டவை என்ற அர்த்தப்பட தாம் கூறவில்லை எனக் கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

தமது அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கு தாக்குதல் மேற்கொண்டவர்களை பக டைக்காய்களாக பெயர் குறிப் பிடாத சில தரப்புக்கள் பயன் படுத்தியுள்ளதாக தம்மை மேற் கோள் காண்பித்து ஊட கங்களில் வெளியான செய்திகள் திரிபுபடுத்தப்

15

## யாழ்ப்பாணத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ்ப்பாணத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்றுத் திங்கட் கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,

15

## விஜயதாஸ சொன்னவை எல்லாமே முழுப் பொய்!

### அமைச்சர் பவித்ரா கூறுகிறார்

கொழும்பு, ஏப். 20

பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ வினால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

02



## அன்னை பூபதிக்கு நேற்று வடக்கு, கிழக்கில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 20

தடைகள்- அச்சுறுத்தல்கள் - கண்காணிப்பு களுக்கு மத்தியில் அன்னை பூபதியின் 33ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று வடக்கு - கிழக்கில் அனுஷ்டிக்கப்பட்டது.

15

## கொழும்பு துறைமுக நகருக்கும் இலங்கைச் சட்டம் பொருந்தும்!

### நீதி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 20

கொழும்பு துறைமுக நகரத் துக்கும் இலங்கைச் சட்டம் பொருந்தும் என நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று திங்கட் கிழமை தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரம் கொழும்பு நிர்வாக மாவட்டத் தின் ஒரு பகுதியாக இருக்கும் என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அது ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவினால் நிய



மிக்கப்படும் கொழும்பு துறை முக நகர ஆணைக்குழு வின் கீழ் செயல்படும் என்றும் அமைச்சர் அலி

15



07 அன்னை பூபதிக்கு பல்கலையில் அஞ்சலி



08 கொரோனா தடுப்பூசியால் மாரடைப்பு ஏற்படுமா?



13 வடக்கு மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும்



14 அச்சுறுத்தலுக்கு ஒருபோதும் அடிபணியப் போவதில்லை

## இப்படியும் நடக்கிறது...!

பள்ளிகூடத்தில் மாணவர்கள் மத்தியில் ஒரு போட்டி நடத்தினார்கள்.

பழங்காலத்தில் வாழ்ந்த மக்களுடைய வீடுகள், அரண்மனை மாதிரிகள் செய்து காட்டவேண்டும் என்பதுதான் அந்தப் போட்டி.

தனது தந்தையிடம் அதற்குரிய பொருட்களை வாங்கித் தரச் சொன்ன ஒரு மாணவி, போட்டிக்காக, அந்த காலத்து வீடுகள், அரண்மனை, கோவில், கிணறு என ஒவ்வொன்றாக செய்ய ஆரம்பித்தாள்.

ஒரு வாரம் கழித்து எல்லாவற்றையும் செய்து முடித்தாள். அதில் ஓர் அரண்மனை, சில வீடுகள், கிணறு, கோவில், தோட்டம் என்பவற்றை அமைத்திருந்தாள்.

பின் தனது தந்தையை அழைத்து வந்து, தான் செய்தவற்றைக் காட்டினாள். அதைப் பார்த்த அவர் ஆச்சரியப்பட்டார்.

"அப்படியே தத்ரூபமா இருக்கு" என்று மகளைப் பாராட்டினார் தந்தை. மறுநாள், அவள் செய்து வைத்திருந்த மாதிரிகளை பள்ளிக்கூடத்தில் காண்பிக்க எடுக்கச் சென்றாள். அங்கே, ஒரு மாதிரி வீடு உடைந்திருந்தது.

மாணவியின் கவலைக்கு ஆறுதல் சொல்ல தந்தையால் முடியவில்லை.

'அப்பா இதெல்லாம் நான் எவ்வளவு யோசிச்சு, யோசிச்சு, செய்தேன் தெரியுமா? அதுவுமில்லாம இரவு எல்லாம் கண் முழிச்சு இருந்து கஷ்டப்பட்டு செய்தேன். ஆனா, இப்படி ஆயிடுச்சே' என்று சொல்லி அழுது கொண்டேயிருந்தாள்.

அப்பா, அவளை எவ்வளவோ சமாதானப்படுத்தியும் அவள் அழுகையை நிறுத்தவில்லை.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த அவளது தாத்தா அவளைக் கூப்பிட்டு, அந்த உடைந்த வீட்டை கொண்டுவரச் சொன்னார்.

'உடைந்த வீட்டுக்குப் பக்கத்தில் தாத்தாவின் பழைய வீடு என்று எழுதி வைச்சிடு. யாராவது கேட்டால், இது அந்த காலத்துல எங்க தாத்தா வீடா இருந்துச்சு. பெரிய மழை பெய்தபோது இடிந்துவிட்டது என்று சொல்லிடு' என்றார் தாத்தா.

கண்களை துடைத்துவிட்டு, ஓர் அட்டையில் தாத்தாவின் பழைய வீடு என்று எழுதி, உடைந்திருந்த வீட்டில் ஒட்டிவைத்து விட்டு 'ரொம்ப நன்றி தாத்தா' என்றாள்.

ஏதாவது தப்பு நடந்து விட்டால் அதை எப்படி சரி பண்ணலாம் என்றுதான் பார்க்க வேண்டும். அதை விட்டுட்டு அழுது கொண்டே இருந்தால் எந்தப் பயனும் இல்லை!

'மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து அந்த ஆணையை மீறாமல் ராஜபக்ஷ அரசு நடந்து கொள்ளவேண்டும். இதுதான் இந்த அரசை நிறுவிய மக்களின் விருப்பம். எனவே, மக்கள் ஆணையை மீறிச் செயற்பட்டால் இந்த அரசு கவிழ்வதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது' - இப்படிச் சொல்லியிருப்பவர், எதிர்க்கட்சி ஒன்றைச் சேர்ந்தவராகத் தான் இருக்கமுடியும் என்று நீங்கள் நினைத்தால் அது தவறானது.

இப்படிச் சொல்லியிருப்பவர் வேறு யாருமல்ல, அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான விமல் வீரவன்ஸதான் இவ்வாறு திருவாய் மலர்ந்திருக்கிறார்.

சில நாட்களுக்கு முன்னர், ராஜபக்ஷவை ஆட்சிப்பீடம் ஏற்றியது தானே என்று தெரிவித்திருந்தவர் இந்த விமல். 2015ஆம் ஆண்டு தேர்தலில் தேல்வியடைந்த பின்னர், உடைந்துபோய், தனது சொந்த ஊருக்குச் சென்று ஒதுங்கியிருந்த மஹிந்த ராஜபக்ஷவை கொழும்புக்கு அழைத்து வந்து, மாபெரும் கூட்டத்தைக்கூட்டி அவருக்குத் தெம்பு கொடுத்து, மீண்டும் எழுச்சிபெற வைத்தவன் நான் என்று விமல் அப்போது தெரிவித்திருந்தார்.

இப்போது மக்களின் ஆணையை மீறி செயல்பட்டால் இந்த அரசு கவிழ்வதை யாராலும் தடுக்கமுடியாது என்று எச்சரித்திருக்கிறார்.

அவர் மட்டுமல்ல, இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு துணையாக இருந்த பலரும் இப்போது இதே பல்லவியைத்தான் பாடிக் கொண்டிருக்கின்றனர்.

2015 தேர்தலின் பின்னர், மஹிந்த ராஜபக்ஷ அரசியல் பேசியது நாரஹன்பிட்டி அபயராம விகாரையில்தான். இந்த விகாரையில் வைத்துத்தான் அவர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தால் என்ன, அல்லது முக்கிய அறிவிப்புக்களை விடுத்தால் என்ன எல்லாமே இந்த விகாரையில்தான் நடந்தன.

ஒரு பௌத்த ஆலயத்தை தனது அரசியலுக்கு அவர் பயன்படுத்துவதாகக்கூட அப்போது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அதையெல்லாம் மஹிந்தவோ அல்லது, அந்த விகாராதிபதியோ கண்டு கொள்ளவே இல்லை. ஆனால், அந்த விகாராதிபதியும்கூட இப்போது இந்த அரசுக்கு எதிராக குரல்கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்.

மைத்திரி - ரணில் ஆட்சியின்போது, ஏற்பட்ட ஒக்ரோபர் புரட்சி, நாட்டை பல வருடங்களுக்கு பின்னுக்குக் கொண்டு சென்றது. பின்னர் நடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அதனை மேலும் பின் தள்ளியது.

புதிய ஆட்சி இந்த பின்னடைவுகளிலிருந்து நாட்டை மீட்கும் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் இருந்தது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த ஆட்சியில் என்னவெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அவை மெதுமெதுவாக நடக்கத் தொடங்கியிருக்கின்றன. ஆனால், இந்த அரசை பதவிக்குக் கொண்டு வந்தவர்களின் எதிர்பார்ப்பு வேறுவிதமாக இருந்தது. அந்த எதிர்பார்ப்பு நிறைவேறி நாட்டில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தால், அதன் அனுகூலம் ஒருவகையில் நமக்கும் கிடைத்திருக்கலாம்.

ஆனால், நாட்டில் தற்போது நடந்துகொண்டிருப்பவை, எல்லாவற்றையும் கேள்விக்குறியாக்கிக் கொண்டிருக்கின்றன.

**- ஊர்க்குருவி.**

# கொரோனா தடுப்பூசி திட்டம் 2ஆம் கட்டம் மேயில் ஆரம்பம்!



**கொழும்பு,ஏப். 20**

**ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராஸெனகா கோவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது கட்டம் மே மாதம் முதலாவது வாரத்திலிருந்து செலுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

தொற்றுநோயியல் பிரிவின் தலைமை வைத்திய நிபுணர் சுதத் சமரவீர இதனை தெரிவித்துள்ளார்.

தடுப்பூசியின் முதல் டோஸை பெற்றவர்களிற்கு, இரண்டாவது 'டோஸ்' செலுத்துவது பற்றி இன்று சுகாதார அமைச்சில் கலந்துரையாடல் நடந்தது.

தடுப்பூசி செயல்முறை மற்றும் தடுப்பூசி திகதிகள் நிபுணர் குழுவுடன் நேற்று விவாதிக்கப்பட்டன.

தேசிய தடுப்பூசி இயக்கத்தின் ஒரு பகுதியாக 925,242 நபர்கள் இதுவரை இலங்கையில் கோவி ஷீல்ட் தடுப்பூசியை பெற்றுள்ளனர்.

(ஐ)



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் தங்கியுள்ள ஆண்கள், பெண்கள் உட்பட54 வயோதிபர்களுக்கு சித்திரைப் புத்தாண்டை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரமத்தால் உடுபுடவைகள் வழங்கப்பட்டன. ஆச்சிரமம் பொறுப்பாளர் அமுத கலாசுரபி செ.மோகன்தாஸ் சுவாமிகள் அவற்றை வழங்கி வைத்தார்.

படம்: வடமராட்சி நிருபர்

## விஜயதாஸ...

விஜயதாஸ ராஜபக்ஷ ஓர் அரசியல் வாதியாகவும் ஒரு தொழில்முறை நிபுணராகவும் சிந்திக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கட்சிக்குள்ளும் நாட்டுக்குள்ளும் சர்வதேச அளவிலும் பிரச்னைகளை உருவாக்குவதற்கும், பல தசாப்தங்களாக நம் நாட்டுக்கு உதவும் நாடுகளிலிருந்து நாட்டைப் பிரிப்பதற்கும் அவர் ஒரு பயனற்ற முயற்சியை மேற்கொண்டு வருகிறார் என்றும் அவர் குற்றம்சாட்டி னார்.

அமைச்சு, சுகாதார அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் முயற்சிகள் காரணமாக உலகளாவிய தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் இலங்கை வெற்றி பெற்றுள்ளது என்றும் அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி குறிப்பிட்டார்.

அண்டை நாடான இந்தியா, அமெ ரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி உள்ளிட்ட ஒவ்வொரு நாட்டிலும் கொவிட் வைரஸ் வேகமாக பரவி வரும் நிலையில் அனைவரதும் கடின உழைப்பின் காரணமாக நாட்டில் தொற்று பரவலாகக் குறைவடைந்து வருவதாகவும் அவர் கூறினார்.

## மாகாண...

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

சிறிலங்கா பொதுஜன முன் னணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள தலைமை யகத்தில் நடந்தபோது இத்தகவல்களை அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். இங்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது:

"தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கருத்து குறித்து நாங்கள் ஆச்சரியடைகின்றோம். மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும்படி அவர்கள் கூறுகின்றார்கள். ஆனாலும் தேர்தலுக்கான தாமதத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஒரு காரணமாகும்.

மிகவும் பிழையான முறையில் முறையற்றதாக நல்லாட்சிக்காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அமுலில் இருந்த தேர்தல் முறையும் நீக்கப்பட்டது. அதற்கு மாற்றீடான முறையும் அறிமுகஞ்செய்யப்படவில்லை.

அந்த அனைத்து படிமுறைகளையும் பூரணப்படுத்தியதன் பின்னரே எம்மால் தேர்தலை நடத்தமுடியும். மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக தேர்தல் முறை பற்றிய புதிய சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்பிக்க வேண்டும் என்ற வியாக்கியானத்தை உச்சநீதிமன்றம் வழங்கியிருக்கிறது.

தற்போது அந்த சட்டமூலத்தை தயாரிக்கின்ற பணி இடம்பெற்று வருகிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன், அமைச் சரவைப் பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார். மாற்றீடு வழியை அவர் யோசனையாக சமர்பித்துள்ளார்.

தேர்தல் முறை என்ன என்பதை அனைத்துக் கட்சிகளிடமும் நாங்கள் கோரவுள்ளோம். அதன் பின்னரே வரைவாக பாராளுமன்றத்தில் சமர்பிக்கவுள்ளோம். அந்த வகையில் இன்னும் 06 மாதங்களுக்குள் இந்தத் தேர்தலை நடத்த எதிர்பார்க்கின்றோம்." - என்றார்.

கல்வி TV
CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu
20.04.2021 செவ்வாய்க்கிழமை
சார்வரி, சித்திரை 07
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அந்த பெரும் அரசியல் என்ன?

கொழும்பு அரசியல் தொடர்ந்தும் ஒரு நெருக்கடி நிலையின் காட்சியாகவே இருந்துவருகின்றது. ஒருபுறம் பொதுஜன பெரமுன கூட்டணி தொடர்பில் இடம்பெற்றுவரும் சர்ச்சைகள். இன்னொருபுறம், சீனாவின் கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் புதிய சர்ச்சைகள். அதனால், அரசாங்கத்திற்குள் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகள் - எதிர்ப்புக்கள். இந்த நிலைமைகள் ஒரு புறமென்றால், மறுபுறம் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் கொடுத்துவரும் நெருக்கடிகள்.

இவையனைத்தும் ஜனாதிபதி கோட்டாபயவிற்கு பெரும் நெருக்கடியாக மாறியிருக்கின்றன. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கைதுசெய்யுமாறு மல்கம் ரஞ்சித் கோரிக்கை முன்வைத்திருந்தார். இதனால், பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்குள் பிறிதொரு நெருக்கடி ஏற்பட்டது. தற்போது மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனி வழியில் செல்வது தொடர்பிலும் சிந்தித்து வருவதான செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்த நெருக்கடிகளின் மத்தியில், கர்தினால் மல்கம் ரஞ்சித் பிறிதொரு சர்சைக்குரிய கருத்தை வெளியிட்டிருக்கின்றார். அதாவது, ஈஸ்டர் தாக்குதலானது, மத வெறியினால் நிகழ்ந்த ஒன்றல்ல. மாறாக, அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவே இது நடந்திருக்கின்றது. மத தீவிரவாதத்தை பயன்படுத்தி, தனது அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்த நினைத்த குழுவொன்றே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றது. மல்கம் ரஞ்சித்தின் இந்தக் கருத்து மிகவும் பாரதூரமானதாகும். இது வரையில் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்துக்கள், அபிப்பிராயங்கள் அனைத்தையுமே மல்கம் ரஞ்சித் கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றார். மல்கம் கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லாவிட்டாலும்கூட, இவ்வாறான கருத்துக்கள் பொதுவெளியில் முன்வைக்கப்படும்போது, அது அரசாங்கத்தின் மீதான நெருக்கடியாக - குறிப்பாக, ஜனாதிபதிக்கான நெருக்கடியாகவே மாறும் - மாறிவருகின்றது.

ஆனால், அதே மல்கம் ரஞ்சித், முன்னர் வேறுவிதமாக பேசியிருந்தார். ஆனால், தற்போது வேறு விதமாக பேசுகின்றார். அடிப்படையில் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கு நெருக்கமானவராக அறியப்படும் மல்கம் ரஞ்சித்தின் சமகால நிலைப்பாடு புரிந்துகொள்வதற்கு கடினமானதாகவே இருக்கின்றது. மல்கம்மின் நோக்கம் எதுவாக இருந்தாலும்கூட, அவர் தொடர்ந்தும் பொதுவெளிகளில் முன்வைத்து வரும் கருத்துக்கள் நிச்சயம் ஆளும் பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் மீது, பல்வேறு வழிகளிலும் அழுத்தங்களை ஏற்படுத்திவருகின்றது.

ஈஸ்டர் தாக்குதலானது ஒரு குழுவினரின் அரசியல் அதிகாரத்தை நோக்காகக்கொண்டு இடம்பெற்றதெனின், அந்தக் குழு எது? அவர்களால் எவ்வாறு இவ்வாறான இஸ்லாமிய தீவிரவாத அமைப்பினரை பயன்படுத்த முடிந்தது? ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று சில மணித்தியாலங்களிலேயே, அதற்கான பொறுப்பை சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். உரிமை கோரியிருந்தது. இதுவும் மல்கம் ரஞ்சித் குறிப்பிடும் குழுவினால்தான் வழிநடத்தப்பட்டதா? மல்கம்மின் பதில் என்ன?

ஆனால், நிலைமைகளை உற்றுநோக்கும்போது, ஈஸ்டர் தாக்குதல் விவகாரம் சாதாரணமாக ஓய்ந்துவிடாதென்றே தெரிகின்றது. தோண்டத்தோண்ட பூதம் வருமென்று கூறுவதுபோல், ஈஸ்டர் தாக்குதல் எத்தனை பூதங்களை ஒளித்துவைத்திருக்கின்றது என்பதை பொறுத்திருந்துதான் நோக்கவேண்டும்.

# பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் துணிச்சலான கருத்து!

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற மோசமான உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து துணிச்சலாகவும் அதேசமயம் ஆணித்தரமாகவும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

நாளை ஏப்ரல் 21ஆம் திகதி இலங்கையில் கொழும்பு, நீர்கொழும்பு, மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஏககாலத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்களின் இரண்டாவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் என்ற முறையில் உயிர்த்த ஞாயிறு அனர்த்தத்தின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்து கத்தோலிக்க பாடசாலைகளையும் மூடி 2019ஆம் ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறும் பேராயர் மல்கம் ரஞ்சித் கேட்டுக்கொண்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் எட்டு தற்கொலைக் குண்டுதாரிகள் உட்பட 269 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

**அமைதி பேணிய பேராயர்**

அச்சமயம் இத்தாக்குதல்களின் பின்னர் ஏற்படக்கூடிய பின்விளைவுகளுக்கு இடந்தராது, ஓர் உயர்வான ஆன்மீகத் தலைவருக்குரிய பொறுமையோடு பேராயர் மல்கம் ரஞ்சித் கத்தோலிக்க மக்களிடையயே அமைதியைப்பேணியிருந்தார்.

ஆனால், பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்ற ரீதியில் பேராயர் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இரண்டாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தமது கண்டனத்தை குண்டுத் தாக்குதலுக்கான உண்மைக் காரணத்தை வெளியிடும் வகையில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் இரண்டாம் ஆண்டை முன்னிட்டு கொழும்பின் பொரளை மற்றும் மாதம்பிட்டி மயானங்களில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிகளை திறந்துவைத்து அஞ்சலி செலுத்தியபோதே பேராயர் கர்தினால் பொறுமையிழந்தவராக தமது உள்ளக்கிடக்கையை வெளியிட்டிருந்தார்.

**துணிச்சலான கண்டனம்**

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் மதத்தையோ அல்லது ஓர் இனக்குரோதத்தையோ அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதல்ல என்று மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளதோடு, சிலரது அரசியல் ரீதியான அதிகாரங்களைப் பலப்படுத்திக்கொள்ளவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன எனவும் மிகத் துணிச்சலான முறையில் தெரிவித்துள்ளார்.

**பாப்பரசர் தெரிவில் பங்குபற்றியவர்**



பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசரை தெரிவு செய்ய வத்திக்கான் நகரில் நடத்தப்படுகின்ற ஆன்மீக ரீதியான தேர்தலிலும் பங்குபற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகில் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த கர்தினால்களின் அந்தஸ்திலிருக்கும் உயர்மத குருமார்களிடையே இத்தெரிவு இடம்பெறுவதோடு, இத்தெரிவில் இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையை பிரதிநிதித்துவப்படுத்திய கர்தினால் தரத்தைச் சேர்ந்த முதலாவது மதகுரு என்ற பெருமைக்குரியவராகவும் மல்கம் ரஞ்சித் விளங்கியிருந்தார்.

எனவே, சகல வேறுபாடுகளுக்கும் அப்பாற்பட்ட நிலையில் நின்று தனது மனதுக்குபட்டதை ஒளிவு மறைவின்றி பேராயர் தெரிவித்துள்ளார்.

**குண்டு வெடிப்புகளின் நகரம்**

கொழும்பு மாநகர் என்பது தென்னாசியாவிலேயே 2009ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் அதிகளவான குண்டுவெடிப்புகளுக்குள்ளான நகரமென்பது குறிப்பிடத்தக்கது.


2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற கொழும்பு மாநகர குண்டு வெடிப்புகளை நோக்கும்போது, 1996ஆம் ஆண்டு ஜனவரியில் இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கி குண்டு வெடிப்பே மிக மோசமானதாக விளங்கியது.

எனவே, 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தம் முடிவுக்கு வந்திருக்காவிட்டால் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் மீதான பழியையும் தமிழீழ விடு தலைப் புலிகள் மீதே போட்டிருக்கக்கூடிய சூழ்நிலைகளே பலமடைந்திருக்கவும் முடியும்.

ஆனால், அவ்வாறில்லாமல், மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டதுபோல, அதிகார வெறிபிடித்த சிலர் தமது அரசியல் அதிகாரங்களை பலப்படுத்தி முன்னனெடுக்கவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்டமையை அவதானிக்க முடிகின்றது.

இருந்தபோதிலும், 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையின் நம்பகத்தன்மை குறித்துக்கூட பேராயர் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ள நிலையில், அதிகார வெறியின் கோரத்தாண்டவத்துக்கு அப்பாவி கத்தோலிக்க அடியவர்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டுள்ளதையே 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள் எடுத்துக்காட்டுபவையாக இருக்கின்றன.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏப்ரல் - 20 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - சித்திரை - 07
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 -04.30
திதி : அட்டமி




## 20.04.2021

**மேடம்**
முயற்சியில் வெற்றி கிட்டும் நாள். வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். வருங்கால நலன் கருதித் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம்.

**இடபம்**
வாங்கல்-கொடுக்கல்கள் ஒழுங்காகும் நாள். பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர். பூர்வீக சொத்துகளை விற்றுப் புதிய சொத்துகளை வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்**
யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். பணம் கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை. குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. ஆரோக்கியப் பாதிப்புகள் உண்டு.

**கடகம்**
காலை நேரத்திலேயே கலகலப்பான செய்தி வந்து சேரும் நாள். திருமணப் பேச்சுகள் கைகூடும். கூட்டுத் தொழிலில் உடனிருப்பவர்கள் உறுதுணையாக இருப்பர். நினைத்தது நினைத்தபடியே நடைபெறும்.

**சிம்மம்**
புதிய பாதை புலப்படும் நாள். பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர். மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர் பகை மாற எடுத்த முயற்சி வெற்றி தரும். உத்தியோக மாற்றம் உறுதியாகலாம்.

**கன்னி**
வரவைக் காட்டிலும் செலவு கூடும் நாள். பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். தொழிலில் புதிய முதலீடுகள் செய்வது பற்றி யோசிப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும்.

**துலாம்**
தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும் நாள். மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்.

**விருட்சிகம்**
பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். பிறருக்கு பொறுப்புகள் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. புதியவர்களை நம்பிச் செயல்பட வேண்டாம். பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாகப் பேசவும்.

**தனுசு**
தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள். தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும் பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் ஏற்படும்.

**மகரம்**
மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள். அத்தியாவசியப் பொருட்களை வாங்க அதிகத் தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். வழக்கத்திற்கு மாறாக நீண்ட நேரம் பணிபுரிய நேரிடலாம்.

**கும்பம்**
பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும் நாள். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். தன்னம்பிக்கையோடு பணியாற்றித் தடைகளை அகற்றுவீர்கள். விவாகப் பேச்சுகள் முடிவாகலாம்.

**மீனம்**
நல்ல செய்தி நாடிவரும் நாள். திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பால் தீட்டிய திட்டங்களை நிறைவேற்றுவீர்கள். பாராட்டும், புகழும் அதிகரிக்கும். சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும்.

# கடும் கட்டுப்பாடு!

## தமிழகத்தில் இரவு நேர ஊரடங்கு

சென்னை, ஏப். 20

தமிழகத்தில், கொரோனா தொற்று பரவலை தடுக்க, கடும் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டு உள்ளன. மாநிலம் முழுதும், இரவு நேர ஊரடங்கு, இன்று முதல் அமுலுக்கு வருகிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் கூட்டத்தை தடுக்க, அனைத்து கடைகளும் மூடப்படுகின்றன.

பிளஸ் 2 தேர்வுகளும், திகதி குறிப்பிடப்படாமல் தள்ளி வைக்கப்பட்டு உள்ளன. கொரோனா வேகமாக பரவுவதால், இந்நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்துள்ளது.

தமிழகத்தில், தொற்று பரவலை தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, முதல்வர் பழனிசாமி., சென்னையில் தன் வீட்டில், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். தலைமை செயலர் ராஜிவ்ரஞ்சன், சுகாதாரத் துறை செயலர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்புகள்:

● ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ள செயல்பாடுகளுடன், மேலும் சில செயல்பாடுகளுக்கு, இன்று அதிகாலை முதல், மறு உத்தரவு வரும் வரை தடை விதிக்கப்படுகிறது

● மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும், இரவு, 10:00 மணி முதல், அதிகாலை, 4:00 மணி வரை, இரவு நேர ஊரடங்கு அமல்படுத்தப்படும். இரவு நேர ஊரடங்கின் போது, தனியார் மற்றும் பொது பஸ் போக்குவரத்து, வாடகை ஆட்டோ, டாக்சி மற்றும் தனியார் வாகன உபயோகம் அனுமதிக்கப்படாது

● இரவு நேரங்களில், பொது ஊரடங்கு அமலில் இருப்பதால், வெளி மாநிலம் மற்றும் மாவட்டங்களுக்கு இடையிலான, பொது மற்றும் தனியார் போக்குவரத்தும், அந்த நேரத்தில் அனுமதிக்கப்படாது

● மாநிலங்களுக்கு இடையிலான, பஸ் சேவைகளின் போது, முக கவசம் அணிதல், உடல் வெப்பநிலையை பரிசோதனை செய்தல், கூட்ட நெரிசலை தவிர்த்தல் போன்றவை தவறாமல் பின்பற்றப்படுவதை, சம்பந்தப்பட்ட போக்குவரத்து நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும்



● அவசர மருத்துவ தேவைகளுக்கும், விமான நிலையம், ரயில் நிலையம் செல்ல மட்டும், வாடகை ஓட்டோ, டாக்சி மற்றும் தனியார் வாகன உபயோகம் அனுமதிக்கப்படும்

● அத்தியாவசிய பணிகளான, பால் வினியோகம், நாளிதழ்கள் வினியோகம், மருத்துவமனைகள், மருத்துவ பரிசோதனை கூடங்கள், மருந்தகங்கள், அம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்தி சேவைகள், சரக்கு வாகனங்கள், எரிபொருள் வாகனங்கள், இரவு நேர ஊரடங்கின் போது அனுமதிக்கப்படும்

● ஊடகம் மற்றும் பத்திரிகை துறையினர் தொடர்ந்து இரவிலும் செயல்படலாம்.

● பெற்றோல் மற்றும் டீசல் பங்க்குகள் செயல்படும்.

● தடையின்றி செயல்பட வேண்டிய தொழிற்சாலைகள், அத்தியாவசிய பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், இரவு நேர ஊரடங்கின் போது செயல்படலாம். இந்நிறுவனங்களில், இரவு நேரப் பணிக்கு செல்லும் பணியாளர்களும், தனியார் நிறுவனங்களில், இரவு காவல் பணிபுரிவோரும், அடையாள அட்டை அல்லது அனுமதி கடிதம் வைத்திருந்தால் தான் அனுமதிக்கப்படுவர்.

**ஞாயிறு முழு ஊரடங்கு**

● மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும், ஞாயிற்றுக் கிழமைகளில், முழு ஊரடங்கு அமுல்படுத்தப் படும். அன்றையதினம் இறைச்சி கடைகள், மீன் மார்க்கெட், காய்கறி கடைகள், சினிமா தியேட்டர்கள், வணிக வளாகங்கள் மற்றும் அனைத்து கடைகளும் செயல்பட அனுமதி கிடையாது. இதை கடைப்பிடிக்காதவர்கள் மீது, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தியாவசிய பணிகளான, பால் விநியோகம், நாளிதழ்கள் விநியோகம், மருத்துவமனைகள், மருத்துவ பரிசோதனை கூடங்கள், மருந்தகங்கள், ஆம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்தி சேவைகள் மற்றும் அனைத்து சரக்கு வாகனங்கள், விளை பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள், எரிபொருளை எடுத்துச் செல்லும் வாகனங்கள் அனுமதிக்கப்படும்

● பிளஸ் 2 மாணவர்களுக்கு, பொதுத்தேர்வு தள்ளி வைக்கப்படுகிறது. தற்போது நடந்து வரும் செயல்முறைத் தேர்வு மட்டும், ஏற்கனவே திட்டமிட்டபடி நடத்தப்படும்

● கல்லூரி மற்றும் பல்கலை ஆசிரியர்கள், தங்கள் வீட்டிலேயே, இணைய வழியாக வகுப்புகளை எடுக்க வேண்டும். அரசு, தனியார் கல்லூரி மற்றும் பல்கலை தேர்வுகள், இணைய வழியாக மட்டுமே நடத்தப்படவேண்டும்.

**திருமணத்திற்கு தடையில்லை!**

முழு ஊரடங்கு அமலில் உள்ள நாட்கள் உட்பட, அனைத்து நாட்களிலும், திருமணம் சார்ந்த நிகழ்வுகளில், 100 பேருக்கு மிகாமல் இறப்பு சார்ந்த நிகழ்வுகளில், 50 பேருக்கு மிகாமல் பங்கேற்கவும், ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுடன் நடத்தவும், எந்த தடையும் இல்லை.

# அரச மரியாதையுடன் தகனம்: விவேக்கின் மனைவி நன்றி

சென்னை, ஏப். 20

நடிகர் விவேக்கின் உடல், அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டதற்காக, அரசுக்கு அவரது மனைவி அருள்செல்வி நன்றி கூறினார்.

திடீர் மாரடைப்பு காரணமாக, சென்னையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த, நடிகர் விவேக் கடந்த வெள்ளி காலமானார். அவரின் சமூக சேவையை போற்றும் வகையில், அரசு மரியாதையுடன், உடல் தகனம் செய்யப்பட்டது.இந்நிலையில், நேற்று மதியம், விருகம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில், விவேக் மனைவி அருள்செல்வி உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது, அருள்செல்வி கூறியதாவது:-

கணவரை இழந்து நிற்கும் நிலையில், எங்களுக்கு பக்கபலமாக இருந்த மத்திய, மாநில அரசுகளுக்கு நன்றி. குறிப்பாக, என் கணவர் உடலுக்கு, காவல் துறை மரியாதை அளித்த, தமிழக அரசுக்கு நன்றி. இது, என் கணவருக்கு அரசு அளித்த மிகப்பெரிய கவுரவம். அத்துடன், இறுதிவரை உடன் இருந்த பொலிஸார், ஊடகத் துறை மற்றும் அஞ்சலியில் பங்கு பெற்ற கோடான கோடி ரசிகர்களுக்கும் நன்றி-என்றார்.

# ஊரடங்கு அறிவிப்பு ராமதாஸ் வரவேற்பு

சென்னை, ஏப். 20

'ஞாயிறு மற்றும் இரவு நேர ஊரடங்குக்கு, பொது மக்கள் ஒத்துழைக்கவேண்டும்' என, பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கையில்-

தமிழகத்தில், கொரோனா வைரஸ் பரவலை தடுக்க, நாளை முதல், இரவு நேரங்களிலும், ஞாயிற்றுக் கிழமையிலும் ஊரடங்கு அறிவிக்கப்பட்டு உள்ளது. மக்கள் நலன் கருதி எடுக்கப்பட்ட, இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது.இரவு நேர ஊரடங்கு என்பது, தவிர்க்க முடியாமல் எடுக்கப்பட்ட நடவடிக்கை. இதைத் தவிர, வேறு வழியில்லை. இதனால், பொது மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் இருப்பது, உறுதி செய்யப்பட்டுள்ளது. அரசு அறிவித்துள்ள ஊரடங்குக்கு, அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.பா.ம.க., கோரிக்கையை ஏற்று, பிளஸ் 2 தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள், இதை நல்ல வாய்ப்பாக பயன்படுத்தி, வீடுகளில் தங்கி நன்றாக படித்து, அதிக மதிப்பெண் பெற்று, உயர் கல்வி வாய்ப்புகளை பிரகாசமாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு, ராமதாஸ் கூறியுள்ளார்.

# தமிழ் அரசியல்வாதிகள் ஒருவரை ஒருவர் விமர்சிக்கும் செயலை நிறுத்தவேண்டும்

## சிவாஜிலிங்கம் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப்.20

**தமிழ் அரசியல்வாதிகள் ஒருவரை ஒருவர் விமர்சிக்கும் செயல்பாடுகளை நிறுத்தவேண்டும் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

எதிர்கால மாகாண முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் அரசியல்வாதிகளால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில், நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், ”மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமா? இல்லையா? என்ற நிலைப்பாட்டை இன்னும் அரசு எடுக்கவில்லை. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் பழைய முறையில் நடத்தப்படுமா? அல்லது தொகுதிவாரி அல்லது விகிதாசார முறையில் நடத்தப்படுமா ? என்ற கேள்வி கூட காணப்படுகின்றது.

அந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றால் அதில் யாரை முதலமைச்சராக நிறுத்துவது என்பது தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்கள் அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியத்தின் ஆட்சி இடம்பெறவேண்டும் என மக்கள் மத்தியில் கருத்துக்கள் நிலவி வருகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்குரிய நடவடிக்கையை முன்னெடுப்பதை விடுத்து எதிர்மாறான கருத்துக்களை அரசியல்வாதிகள் முன்வைப்பதை நிறுத்தவேண்டும். அண்மையில் கூட வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், மாவை சேனாதிராசா முதலமைச்சர் வேட்பாளருக்கு தகுதியற்றவர் என்ற கருத்தை குறிப்பிட்டு இருந்தார். அந்த கருத்தை அவர் தவிர்த்திருக்கவேண்டும்.

சம்பந்தன் ஐயாவினால் மாவை சேனாதிராசா தகுதியற்றவர் என்று அடிப்படையிலேயே, தான் தெரிவு செய்யப்பட்டதாக தெரிவித்து இருப்பது மிகவும் வருத்தம் அளிக்கின்றது. குறிப்பாக அந்த சூழ்நிலையின் போது சம்பந்தன் ஐயாவின் முடிவுக்கு கட்டுப்பட்டு நாம் அனைவரும் விக்னேஸ்வரனை ஆதரித்து வெற்றியடையச்செய்தோம்.

ஆனால், அதே கருத்தை இன்று நாங்கள் கொண்டிருக்க முடியாது. அதனால் மாவை சேனாதிராசா தகுதியற்றவர் என்றோ கருத முடியாது. எனவே எதிர்காலத்திலும் நாம் இவ்வாறான ஏட்டிக்குப் போட்டியான கருத்துக்களை தெரிவிப்பதை தவிர்த்து சிறந்த ஒரு ஆட்சியை அமைப்பதற்கு நாம் செயல்பட வேண்டும். எனவே எதிர்வரும் காலத்தில் ஒருவரை ஒருவர் விமர்சித்தல் செயல்பாடுகளை தமிழ் அரசியல்வாதிகள் நிறுத்தவேண்டும்-என்றார்.

# இலங்கை வந்த சுற்றுலா பயணிகளில் 78 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

கொழும்பு, ஏப். 20

கடந்த டிசெம்பர் 28 முதல் ஏப்ரல் 14 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளில் 78 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

டிசெம்பர் 28 முதல் ஏப்ரல் 14 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு 11,961 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இவர்களில் 78 பேருக்கே தொற்று உறுதியானதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும், சுற்றுலாப் பயணிகள் பயணக் குமிழித் திட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்பட்டதால் அவர்கள் உள்ளூர் மக்களுடன் எந்த தொடர்புகளையும் பேணவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுகாதார அதிகாரிகள் புதிய கட்டுப்பாடுகளை அறிவித்தால் அதனை அமுல்படுத்த தமது அமைச்சு அதிகாரிகள் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரங்களில் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர்கள் 70 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நாடு திரும்பிய 45 இலங்கையர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதேபோன்று வெளிநாடுகளில் இருந்து திரும்பிய 49 இலங்கையர்களுக்கு சனிக்கிழமையன்று தொற்று உறுதியானது.

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பும் அதிகளவானவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுவரும் நிலையில் நாடு திரும்புவோருக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சகோதரியை பொல்லால் தாக்கி கொலை செய்தார் சகோதரன்!

கொழும்பு, ஏப். 20

புத்தளம், நுரைச்சோலை - ஆலங்குடா பிரதேசத்தில் தனது மூத்த சகோதரியை கொலை செய்த சகோதரனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

விசேட தேவையுடையவரான 43 வயதான பெண் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதி வீட்டுக்கு தாமதமாக வந்த சந்தேக நபரை அவரது தாய் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

இதனால் கோபமடைந்த அவர் உறங்கிக் கொண்டிருந்த சகோதரியை பொல்லால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என ஆரம்பகட்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

தப்பியோடிய சந்தேகநபரை பிரதேசவாசிகள் பிடித்து நுரைச்சோலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் நுரைச்சோலை பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# வவுனியாவில் நேற்று மனித சங்கிலி போர்!

## ஸ்ரீநகர் கிராம மக்கள் நடத்தினர்





வவுனியா, ஏப். 20

வவுனியா ஸ்ரீநகர் கிராம மக்கள் தமது நியாயமான கோரிக்கைகளை தீர்க்குமாறு வலியுறுத்தி மனித சங்கிலி போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றுக்காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள்,

கடந்த 70 நாட்களாக நாம் எமது கோரிக்கைகளை முன்னிறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். எனினும் எங்களது பிரச்னைகளை தீர்ப்பதற்கு அதிகாரிகளோ, அரசியல்வாதிகளோ முன்வரவுமில்லை-ஆர்வம் காட்டவுமில்லை.

ஸ்ரீ நகர் கிராமம் உருவாகி இந்த வருடத்துடன் 26 வருட காலம் கடந்தும் எமது மக்களுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான காணிகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்கல், வீடு அற்றவர்களுக்கு வீட்டுத்திட்ட உதவி, சீரற்ற வீடுகளை திருத்தம் செய்ய நிதி உதவி, பொது நோக்கு மண்டபம், முன்பள்ளி கட்டமைப்பு போன்ற பல்வேறு தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்த கோரிக்கைகளை முன்வைத்துகடந்த 70 நாட்களாக எமது கிராமத்தில் நாம் போராடி வருகின்றோம். இதனை நிறைவேற்றித்தருவதாக பிரதேச செயலாளர் எழுத்து மூலம் உறுதிமொழி வழங்கியதுடன், எமக்கு 14நாட்களுக்குள் இந்த கோரிக்கைகளில் முதற்கட்டமாக அலைகரைப்பகுதி காணிப் பிரச்னை மற்றும் விளையாட்டு மைதானப் பிரச்னைகளை முடித்துத் தருவதாகக் கூறினார். எனினும் இன்று 70 நாட்கள் ஆகியும் எமது கோரிக்கைகளுக்கு பதில் கிடைக்காத பட்சத்திலேயே இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக முன்னெடுத்துள்ளோம்-என்றனர்.

# வவுனியா பட்டக்காடு கிராமத்தில் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வு

வவுனியா, ஏப். 20

வவுனியா பட்டக்காடு கிராமத்தில் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

வவுனியா பட்டக்காடு ஸ்ரீராம் அறிநெறி பாடசாலை மற்றும் கிராமத்து இளைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதிகளாக வவுனியா நகரசபை உறுப்பினர்களான எஸ். காண்டீபன், ஏ.எம்.லரீப், ஏ.அப்துல் பாரி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.





# நீதிமன்றமொன்றில் முதன்முறையாக பாலூட்டும் தாய்மாருக்குத் தனி இடம்!

கொழும்பு, ஏப். 20

கொழும்பு மேல்நீதிமன்ற வளாகத்துக்குள் பாலூட்டும் தாய்மார்களுக்காக பிரத்தியே பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, நீதிமன்ற வளாகங்களில் பாலூட்டும் தாய்மார் எதிர்கொள்ளும் சிரமத்தை பகிரங்கப்படுத்தியிருந்தார்.

இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட வழக்கில், கடந்த மாதம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஹிருணிகா சரியான தருணத்தில் முன்னிலையாகவில்லை. ஓரிரு நிமிடங்கள் தாமதித்து விட்டார். அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்றத்தில் பாலூட்டும் தாய்மாருக்கு வசதியில்லாத தால் தனது வாகனத்தில் வைத்து குழந்தைக்கு பாலூட்டிவிட்டு வந்ததால் அவரால் வழக்கில் சமுகமளிக்க முடியவில்லை. இதையடுத்து பிடியாணை விலக்கப்பட்டது.

இந்த விவகாரத்தை பகிரங்கமாக குறிப்பிட்டு, பாலூட்டும் தாய்மாருக்குரிய வசதி ஏற்படுத்தப்படவேண்டுமென நீதியமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார். ஹிருணிகாவை பாராட்டிய நீதியமைச்சர், நீதிமன்ற வளாகத்தில் பாலூட்டும் தாய்மாருக்குரிய வசதியை ஏற்படுத்துவதாக உறுதியளித்திருந்தார்.

# இளைஞர் குழு வீடு புகுந்து தாக்கி வவுனியாவில் இருவர் படுகாயம்!

வவுனியா, ஏப்.20

வவுனியா- மகாறம்பைக்குளத்திலுள்ள வீடொன்றுக்குள் வாள் மற்றும் கத்திகள் ஆகியவற்றுடன் உட்புகுந்த குழுவினர், அங்கிருந்தவர்கள் மீது கடுமையான தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்ததுடன், வீடும் பலத்த சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து அவ்விடத்துக்கு வருகைதந்த பொலிஸார் தாக்குதலுக்கு பயன்படுத்திய கத்தி, தலைக்கவசம் ஆகியவற்றை மீட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இத்தாலியில் இருந்து இலங்கைக்கு துப்பாக்கிச்சூடு காயத்துடன் சடலம்

கொழும்பு,ஏப்.20

துப்பாக்கிச் சூட்டு காயத்துடன் கூடிய சடலம் ஒன்று துருக்கி விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்றின் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

32 வயது கம்பஹா, நெதுன்கம பகுதியைச் சேர்ந்த இந்த நபரின் சடலம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நபர் இத்தாலி, ஏப்ரிலியா நகரில் பணியாற்றி வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


இந்த நபர் பணியாற்றிய நிறுவனத்தில் ஏற்பட்ட சம்பவம் ஒன்றில் குறித்த நபர் உயிரிழந்ததுடன் அதன் பின்னர் அவருடைய சடலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என அஜித் ரோஹண தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்கா விமான நிலைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## மூன்றில் இரண்டை வைத்து

# தான்தோன்றித்தனமாக அரசு செயல்படமுடியாது!

## எச்சரிக்கிறார் எல்லே குணவங்ஸ தேரர்



கொழும்பு, ஏப்.20

**கொழும்பு துறைமுக நகர விவகாரத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயல்படவேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது என்பதற்காக தான்தோன்றித்தனமாக செயல்பட இடமளிக்க முடியாது. இதற்காக மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என நாட்டை பாதுகாக்கும் தேசிய திட்டத்தின் தலைவர் எல்லே குணவங்ஸ தேரர் தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள நாட்டை பாதுகாக்கும் தேசிய திட்ட அமைப்பின் காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்ட கருத்துக்கு அரசாங்கம் எதிராக செயல்படுவது தவறான செயல்பாடாகும்.

நாட்டின் எதிர்காலம் குறித்து அக்கறை கொண்டுள்ள அனைத்து தரப்பினரது கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவு குறித்து மாறுபட்ட கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. கருத்துக்களை குறிப்பிட்டவருக்கு எதிர்ப்பு தெரிப்பதை விடுத்து அரசாங்கம் உண்மை காரணிகளை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இச்சட்ட மூலத்துக்கு எதிராக பல்வேறு தரப்பினர் உயர்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இவ்விடயம் குறித்து மக்களை ஒன்றிணைத்து நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

கொழும்பு துறைமுக நகர விவகாரத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயல்படவேண்டும். விடப்படும் ஒரு சில தவறுகள் எதிர்கால தலைமுறையினருக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது. அதற்கு இடமளிக்கவும் முடியாது. பாராளுமன்றில் பெரும்பான்மைப்பலம் உள்ளதால் அரசாங்கம் தான்தோன்றித்தனமாக செயல்படக்கூடாது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பொதுஜன பெரமுன தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளை தற்போது நினைவுபடுத்தி பார்க்கவேண்டும்.

அரசாங்கம் தவறுகளை திருத்திக் கொண்டு மக்களாணைக்கு மதிப்பளித்து அரச நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டும் என பல முறை ஆலோசனை வழங்கியுள்ளோம். நாட்டை துண்டாக்குவதற்கு 69 இலட்சம் மக்கள் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை-என்றார்.

# சட்டவிரோத துப்பாக்கிகளுடன் நால்வர் கைது

கொழும்பு, ஏப்.20

பொலிஸாரால் நேற்று முன்தினம் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாக துப்பாக்கிகளை வைத்திருந்த நான்கு பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனை பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். ஹொரவ்பதான, கலாவன, மீரிகம, தின்னியாவல மற்றும் கலஹ போன்ற பிரதேசங்களில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# அனைத்து தேவாலயங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவு

கொழும்பு, ஏப். 20

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் 2ஆம் வருட நினைவு தினத்தை முன்னிட்டு விசேட ஆராதனை மேற்கொள்வதற்கு அனைத்து தேவாலயங்களிலும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆகவே நாடு முழுவதிலும் உள்ள தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு விடுத்துள்ளது.

கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி, ஈஸ்டர் ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் நினைவாக விசேட ஆராதனைகள், மத நிகழ்வுகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன.ஆகவே தான் எதிர்வரும் ஏப்ரல் 21ஆம் திகதி, விசேட பாதுகாப்பு வழங்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு கொச்சிக்கடையிலுள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் விசேட ஆராதனைகள் நடைபெறவுள்ளமையினால், தேவாலயத்தை சுற்றியுள்ள சில வீதிகள் இன்று மாலை 4மணி முதல் மூடப்படுமென அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# வாகனத்தால் இராணுவத்தினரை மோதிவிட்டு தப்பியவர்களை தேடும் 4 பொலிஸ் குழுக்கள்!

கொழும்பு, ஏப். 20

சட்டவிரோதமாக மரக்குற்றிகளை கடத்திச் சென்ற வாகனத்தினால் ஏ-9 நெடுஞ்சாலை ஓமந்தைச் சந்தியில் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த இராணுவத்தினரை மோதித் தள்ளிய நிலையில் தப்பித்துச் சென்றவர்களை தேடும் நடவடிக்கைகளில் 4 பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் இரண்டு பேரை காயப்படுத்தி தப்பிச் சென்ற கப் ரக வாகனத்தின் சாரதி, உதவியாளர் மற்றும் வாகனத்தின் உரிமையாளர் ஆகியோரை கைது செய்வதற்காக 4 விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர்கள் அந்த பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள், வவுனியா மற்றும் ஒட்டுசுட்டான் பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் ஓமந்தை பகுதியில் உள்ள சோதனைச்சாவடி ஒன்றில் சனிக்கிழமை இரவு, கட்டளையை மீறி பயணித்த குறித்த கப் ரக வாகனம் மோதியதில் இரு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

சட்டவிரோத மரக்குற்றிகளை கடத்திச்சென்ற கெப் ரக வாகனமே இவ்வாறு இராணுவத்தினரை மோதி சென்றதாக பொலிஸ்தெரிவித்துள்ளது.

# பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிக்க ஏற்பாடு

கொழும்பு, ஏப். 20

பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிப்பதற்கான சுகாதார வழிகாட்டிகளை அடுத்த வாரத்திற்குள் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இரண்டாம் தவணை கற்றல் செயற்பாடுகளுக்காக நாடு முழுவதும் உள்ள சகல பாடசாலைகளும் நேற்று திறக்கப்படுகின்றன.

முதலாம் தவணையின்போது காணப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றியே நேற்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி மேல் மாகாணப் பாடசாலைகளின் கற்றல் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இதற்கான சுகாதார வழிகாட்டியானது கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தது.

# மக்களின் ஆணையை மீறினால் ராஜபக்ஷ அரசு கவிழ்வது உறுதி!

## விமல் வீரவன்ஸ திட்டவட்டம்



கொழும்பு, ஏப். 20

**மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து - அந்த ஆணையை மீறாமல் ராஜபக்ஷ அரசு செயல்பட வேண்டும். இது தான் இந்த அரசை நிறுவிய மக்களின் விருப்பம். எனவே, மக்கள் ஆணையை மீறிச் செயற்பட்டால் இந்த அரசு கவிழ்வதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் ஆணையை மீற வேண்டாம் எனவும், வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் அரசிடம் நாம் கோரிக்கை விடுக்கின்றபோது அரசுக்குள் இருக்கும் ஒரு சிலர் எம்மைக் குழப்பவாதிகள் என்று சாடுகின்றனர்.

நாம் ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராகச் செயல்படவில்லை. அன்று தொடக்கம் இன்றுவரை ராஜபக்ச குடும்பத்தையும் அரசையும் பாதுகாத்தே வருகின்றோம். இந்த அரசை நிறுவியதில் எமக்குப் பெரும் பங்கு உண்டு.

மக்களின் ஆணைக்கு மாறாக, நாட்டைத் தாரை வார்க்கும் வகையில் தீர்மானங்களை அரசு எடுத்தால் அதை நாம் பகிரங்கமாகவே எதிர்ப்போம்.

பிரதமர் தலைமையில் நேற்று நடைபெறவுள்ள அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான கூட்டத்தில் இதை நாம் தெளிவாக எடுத்துரைப்போம்-என்றார்.



# அன்னை பூபதியின் 33 ஆவது நினைவு

மட்டக்களப்பு, ஏப். 20

வடக்கு- கிழக்கில் இருந்து இந்திய இராணுவத்தை வெளியேற்றும் பொருட்டு சாகும் வரை உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் 33ஆவது நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், அன்னை பூபதியின் 33ஆவது நினைவு தினம் நேற்று காலை அனுஷ்டிக்கப்பட்டது.

பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் மட்டக்களப்பு- கல்லடி, நாவலடியிலுள்ள சமாதியில் இந்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டு.மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன், ஏறாவூர்பற்று பிரதேசசபை தவிசாளர் சர்வானந்தா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராஜா, மட்டு. மாநகரசபை உறுப்பினர்களான ஜெயா, இராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




# தியாகதீபம் அன்னை பூபதிக்கு யாழ்.பல்கலையிலும் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 20

சாகும் வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்து உயிர் நீத்த தியாக தீபம் அன்னை பூபதிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

அன்னை பூபதியின் 33ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்றைய தினம் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், பல்கலைக்கழகத்தில் நேற்று மதியம் நினைவஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதன்போது மாணவர்கள் அன்னைபூபதியின் உருவப்படத்திற்கு மலர் தூபி, மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பை சேர்ந்த அன்னைபூபதி 1932ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி பிறந்தார். மட்டக்களப்பு-அம்பாறை அன்னையர் முன்னணியின் செயல்பாட்டாளராவர்.

இந்திய அமைதிப்படைக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் நடைபெற்ற காலப் பகுதியில், போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், புலிகளுடன் பேச்சு நடாத்தி தீர்வு காணவேண்டும் என 2 அம்சக் சகோரிக்கையை முன் வைத்து 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வர் ஆலயத்துக்கு முன்பாக நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தார். அவரது போராட்டத்தை முடக்க இந்திய இராணுவம் பல வழிகளில் முயற்சித்தது. உணவு ஒறுப்புக்கு ஆதரவு வழங்கியவர் கள், அன்னை பூபதியின் பிள்ளைகள்என சிலரை கைது செய்தனர். ஆனாலும் அவர் போராட்டத்தை கைவிடாது உறுதியாக முன்னெடுத்தார். அவரது கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில்போராட்டத்தை ஆரம்பித்து 31ஆவது நாளான 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி உயிர் நீத்தார்.

# மாகாணசபை தேர்தல் 2021 வரை ஒத்திவைப்பு?

கொழும்பு, ஏப்.20

மாகாண சபைகளுக்கான தேர்தல் இவ்வருடத்துக்குள் நடைபெறுவதற்கான சாத்தியம் இல்லை என அரச உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

தேர்தல் முறைமை தொடர்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனைக்கு பங்காளிக் கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

இவ் விவகாரம் உட்பட மேலும் சில விடயங்களாலேயே மாகாணசபைத் தேர்தல் இவ்வருடம் இடம்பெறாது என தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தொகுதி மற்றும் விகிதாசாதார அடிப்படையில் (70 இற்கு 30) மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் தொகுதியொன்றுக்கு ஒரு கட்சி மூன்று வேட்பாளர்களை நிறுத்த முடியும் எனவும், மாவட்ட மட்டத்தில் இரு போனஸ் ஆசனங்களை வழங்க வேண்டும் என்ற யோசனையும் முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, அடுத்த வருடம் ஆரம்பத்தில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படலாம் எனவும் அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



# மறைந்த நடிகர் விவேக்குக்கு அஞ்சலியும், மரம் நடுகையும்



வவுனியா, ஏப். 20

மறைந்த நடிகர் விவேக்கிற்கு அஞ்சலியும், மரம் நடுகையும் வவுனியாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

வவுனியா புதிய கற்பகபுரம் மைதானத்தில் கிராம சேவையாளர் சர்வேந்திரன் இந்த நிகழ்வு தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மறைந்த நடிகர் விவேக்கின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மறைந்த நடிகர் விவேக்கின் ஒரு கோடி மரம் நடுவோம் எனும் பெருங்கனவை நனவாக்கும் வகையில் மரம் நடுகை செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மரக்காரம்பளை கிராம சேவகர் நா. ஸ்ரீதரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், மற்றும் சமூக ஆர்வலகர்கள், சுயாதீன இறைஞர்கள் அமைப்பின் உறுப்பினர்கள், இளைஞர்கள், கிராம மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# இணுவிலிலும் மரம் நடுகை

யாழ்ப்பாணம், ஏப். 20

மறைந்த தென்னிந்திய நடிகர் விவேக்குக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இணுவில் இளைஞர்களால் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

ஒரு கோடி மரம் நடுகை செயற்திட்டத்தை நடிகர் விவேக் முன்னெடுத்து வந்திருந்தார். அந்நிலையில், கடந்த சனிக்கிழமை அவர் காலமானார். அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பலர் மரநடுகை செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் வரதராஜா தனகோபியின் ஏற்பாட்டில் இணுவில் இளைஞர்கள் மரநடுகையில் ஈடுபட்டனர்.





“தடுப்பூசியால் ஏற்படுகிற ‘இரத்த உறைவு’ பிரச்னைக்கு இப்போது வருவோம். அடினோ வைரஸைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்ட வர்களுக்கு மிக அரிதாக ‘இரத்த உறைவு’ ஏற்பட்டு இறப்புகள் நிகழ்ந்ததாக வெளிநாடுகளில் தகவல்கள் வந்துள்ளன. இந்தத் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு இரத்தத்தில் தட்டணுக்கள் குறைந்துவிடுவதாலும் தட்டணுக்கள் தேனடைபோல் ஒன்று சேர்ந்துகொள்வதாலும் இரத்த உறைவு ஏற்படுகிறது என அறிந்திருக்கிறார்கள். இந்த இரத்த உறைவு உடனே ஏற்படுவதில்லை. தடுப்பூசி போட்டுக்கொண்ட 20 நாட்கள் கழித்தே உருவாகிறது.”

# கொரோனா தடுப்பூசியால் மாரடைப்பு ஏற்படுமா?

ஒரு நகைச்சுவை நடிகரின் உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்ட நிகழ்வு, ஒரு புதிய தொடக்கம். நெடிய தமிழ் சினிமா மரபை எடுத்துக்கொண்டால், என்.எஸ்.கிருஷ்ணன், எம்.ஆர்.ராதா இருவரின் கலவையும் தொடர்ச்சியும் என்று விவேக்கைச் சொல்லலாம். பழைமைவாதத்தையும் மூடத்தனத்தையும் சிரிக்கச் சிரிக்க விமர்சித்து-சிந்திக்க வைக்கும் நகைச்சுவைப் பாணி அவருடையது. சமூக மாற்றத்துக்கான பகுத்தறிவுக் கருத்துகளைத் திரைப்படங்கள் மூலமாகச் சொல்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் அன்றாட வாழ்விலும் சாத்தியப்பட்ட வழிகளில் எல்லாம் மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கும் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டார்.

கொரோனாவுக்கு எதிரான போரில், தடுப்பூசியே இன்று மனிதகுலம் கொண்டிருக்கும் முக்கியமான ஆயுதம் என்பதை மிகத் துல்லியமாக உணர்ந்திருந்த விவேக், தடுப்பூசியைத் தான் செலுத்திக்கொண்டதும், அதற்கு அரசு மருத்துவமனையைத் தேர்ந்தெடுத்ததும், ஊடகங்கள் வழியாகப் பொதுமக்கள் மத்தியில் அதைப் பிரசாரமாக முன்னெடுத்ததும் அவருடைய சமூகப் பணியின் தொடர்ச்சி. அவருடைய எண்ணங்களுக்கு நேர் எதிராக கொரோனா தடுப்பூசிக்கு எதிர்ப் பிரச்சாரத்துக்கு ஒரு கூட்டம் இன்று அவருடைய மரணத்தையே ஓர் ஆயுதமாக்க முற்படுவது இந்தச் சமூகத்தில் புரையோடியிருக்கும் சில மூடத்தனங்களுக்கு எதிராகக் காலம் முழுவதும் நாம் போராடிக்கொண்டேதான் இருக்க வேண்டுமோ எனும் சலிப்பையே உண்டாக்குகிறது.

விவேக், கொரோனாவுக்குத் தடுப்பூசி செலுத்திக் கொண்ட மறுநாளில் தீவிர மாரடைப்புக்குள்ளாகி இறந்தது தற்செயல்தானே அன்றி, தடுப்பூசியின் நேரடி விளைவு அது என்று சொல்லிவிட முடியாது.

பொதுவாக, கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டதால் மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவு. பயனாளிக்கு ஏற்கெனவே இதயம் தொடர்பான பிரச்னைகள் இருந்திருந்தால் அது தற்செயல் நிகழ்வாக ஏற்படலாமே தவிர, தடுப்பூசிக்கும் மாரடைப்புக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக எந்த ஒரு ஆய்வுக் கட்டத்திலும் தகவல் இல்லை. இந்தியாவில் இதுவரை 10 கோடிப் பேருக்கு மேல் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர். அவர்களில் தடுப்பூசியால் மாரடைப்பு ஏற்பட்டதாகத் தரவுகள் எதுவும் இல்லை. உலக அளவில் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களில் சிலருக்கு இரத்த உறைவு ஏற்பட்டதாக மட்டும் சில தரவுகள் வந்துள்ளன.

**இரத்தக்குழாயில் கொழுப்பு அடைப்பு**

மாரடைப்பு என்பது இதயத் தசைகளுக்கு இரத்தம் விநியோகிக்கும் மூன்று கொரோனரி இரத்தக்குழாய்களில் ஏதாவது ஒன்றிலோ பலவற்றிலோ அடைப்பு ஏற்படுவதால் வருகிறது. இந்த அடைப்பு இரண்டு வழிகளில் ஏற்படலாம். ஒன்று, நாம் சாப்பிடும் உணவில் அதிகக் கொழுப்பு இருந்தால், அது கொழுப்புப் புரதமாக மாறி சிறிது சிறிதாக இரத்தக்குழாய்களில் படிந்து அடைத்துக்கொள்வது. இது நேரடியாக கொரோனரி குழாய்களில் படிந்து அடைத்துக்கொள்வதும் உண்டு. சமயங்களில், உடலில் வேறெங்காவது இரத்தக்குழாயில் இருக்கும் கொழுப்புப் புரதக் கட்டியானது இரத்தக்குழாயை உள்புறமாக முக்கால்வாசி அடைத்த பிறகு உடைந்துவிடும். அப்போது இரத்தக்குழாய் செல்களிலிருந்து சிறிது ரத்தமும் கசிந்து அந்த உடைப்புக் கட்டியின்மீது முலாம்போல் பூசி, இரத்த உறைவுக்கட்டியாக அதை மாற்றிவிடும். இது உடல் முழுவதும் பயணிக்கும். அந்தப் பயணத்தின்போது இதயத்துக்கு வந்து கொரோனரி குழாயை அடைப்பதும் உண்டு. இந்த இரண்டு நிகழ்வுகளும் ஒரு நாளில் ஏற்பட வாய்ப்பில்லை. ஏற்கெனவே பல மாதங்களாக, வருடங்களாக இருந்து திடீரென்று அதன் இருப்பைக் காட்டும். அதுதான் நெஞ்சுவலி.

ஒருவருடைய கொரோனரி இரத்தக்குழாயில் கொழுப்புப் புரதக் கட்டி இருக்கிறதா, இல்லையா என்பதை சாதாரண பரிசோதனைகளில் தெரிந்து கொள்ள முடியாது. முக்கியமாக, கொரோனா தடுப்பூசி போடுவதற்கு முன்பு பரிசோதிக் கப்படும் இரத்த அழுத்தம், நாடித் துடிப்பு, இரத்த ஆக்ஸிஜன் அளவு ஆகிய பரிசோதனைகளில் இதை அறிய முடியாது. கொரோனரி ஆஞ்சியோகிராம், சி.டி. ஆஞ்சியோகிராம் ஆகிய பரிசோதனைகளில்தான் இது தெரியவரும். வழக்கமாக, 50 வயதைக் கடந்தவர்களுக்கு நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், மிகை இரத்தக் கொழுப்பு போன்றவை கட்டுப்பாடில்லாமல் இருந்தால் மாரடைப்பு வரும். இது நாட்பட்ட நிகழ்வு. இதயம் தொடர்பான பிரச்னை உடையவர்கள் தடுப்பூசி போட்டுக்கொள் வதற்கு முன்பாகத் தங்கள் இதய மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்றுக்கொள்வது நல்லது என்று சொல்வதற்குக் காரணம், நடிகர் விவேக்குக்கு நிகழ்ந்தது போல் தற்செயல் நிகழ்வுக்காகத் தடுப்பூசியைக் குறை சொல்லக்கூடாது என்பதற்குத்தான்.

**- மருத்துவர் கு.கணேசன்**

**ரத்த உறைவு ஏற்படுவது ஏன்?**

தடுப்பூசியால் ஏற்படுகிற ‘இரத்த உறைவு’ பிரச்னைக்கு இப்போது வருவோம். அடினோ வைரஸைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு மிக அரிதாக ‘இரத்த உறைவு’ ஏற்பட்டு இறப்புகள் நிகழ்ந்த தாக வெளிநாடுகளில் தகவல்கள் வந்துள்ளன. இந்தத் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களுக்கு இரத்தத்தில் தட்டணுக்கள் குறைந்து விடுவதாலும் தட்டணுக்கள் தேனடைபோல் ஒன்று சேர்ந்துகொள்வதாலும் இரத்த உறைவு ஏற்படுகிறது என அறிந்திருக்கிறார்கள். இந்த இரத்த உறைவு உடனே ஏற்படுவதில்லை. தடுப்பூசி போட்டுக்கொண்ட 20 நாட்கள் கழித்தே உருவாகிறது.

ஐரோப்பாவில் இந்தத் தடுப்பூசி போட்டுக்கொண்ட ஒரு இலட்சம் பேரில் ஒருவருக்கும், பிரிட்டனில் 25 ஆயிரம் பேரில் ஒருவருக்கும் அமெரிக்காவில் 10 இலட்சம் பேரில் ஒருவருக்கும் மரணம் நேர்ந்திருக்கிறது. ஆக, இந்த விபரீதம் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. இந்தியாவில் ‘கோவிஷீல்டு’ தடுப்பூசியால் இரத்த உறைவு வந்து இறந்திருப்பவர்கள் 79 பேர் மட்டுமே. இது தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் வெறும் 0.0002%. அதே நேரத்தில் தடுப்பூசி போட்டுக்கொள்ளாதவர்களுக்கு கொவிட் 19 நோய் வந்து, தீவிரமானால் இரத்த உறைவு வந்து இறப்பதற்கு 40% வாய்ப்பு இருக்கிறது.

இங்கே கவனிக்க வேண்டிய இன்னொரு விஷயம், இந்த இரத்த உறைவானது ‘மாடர்னா எம்.ஆர்.என்.ஏ.’, ‘பைசர் எம்.ஆர்.என்.ஏ.’, ‘கோவக்சின்’ போன்ற தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டவர்களுக்கு ஏற்பட்டதாக இதுவரை தகவல்கள் இல்லை. நடிகர் விவேக் செலுத்திக்கொண்டது ‘கோவக்சின்’ தடுப்பூசி. ஆகவே, தடுப்பூசி போட்டுக்கொண்டதால் அவருக்கு மாரடைப்பு வந்தது என்று கூறுவதற்கு ஆதாரமே இல்லை. மேலும், தடுப்பூசியால் உடலில் இரத்த உறைவு ஏற்பட்டுள்ளதா என்பதை அறிய ‘டி-டைமர்’ பரிசோதனை உள்ளது. இந்தப் பரிசோதனையிலும் அவருக்கு ரத்த உறைவு ஏற்பட்டதற்கு ஆதாரமாகத் தகவல் இல்லை. அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது என்பதை கொரோனரி ஆஞ்சியோகிராம் உறுதிசெய்துள்ளது என்றுதான் மருத்துவ அறிக்கைகள் தெரிவித்துள்ளன. எனவே, கொரோனா தடுப்பூசி குறித்து ஊடகங்களில் உலவும் அறிவியலற்ற அறைகூவல்களுக்குப் பொதுச் சமூகம் அடிமையாகிவிடாமல் கொரோனா தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முன்வர வேண்டும்.

இந்த இடத்தில் அரசுக்குச் சொல்ல வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. தடுப்பூசி போட்ட பின்னர் உடனடியாக நடக்கும் மரணங்களில், இறந்தவர்களின் உடல்களை மருத்துவத் துறையினர் உடற்கூறு ஆய்வுசெய்து உண்மையான காரணத்தை வெளிப்படையாக அறிவிக்கும் முடிவை அரசு எடுக்க வேண்டும். அது தேவையற்ற சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்!

**- தி இந்து**

# மக்கள் ஆணைக்கு முரணாக அரசாங்கம் செயல்பட்டால் எதிர்த்து போராடுவோம்



## உதய கம்மன்பில நேர்காணல்

“அரசாங்கம் மக்கள் ஆணைக்கு எதிராக செயல்பட்டால் நானும் விமலும் அரசாங்கத்திற்கு எதிராக செயல்படுவோம். மாகாண சபை திருத்த சட்டமூல வரைவு மக்கள் ஆணைக்கு புறம்பாக அமைந்துள்ளது. அதனால் அதனை நாம் எதிர்க்கிறோம்” என அமைச்சரவை பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார். சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்திருக்கின்றார்.

அந்த செவ்வியின் தமிழ் வடிவம் வருமாறு:

**கேள்வி: அரசியல் அரங்கில் தர்ம காரணங்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றீர்கள். அவ்வாறாயின் எதற்காக பின்னர் எதிர்ப்பை வெளியிடுகின்றீர்கள்?**

நாட்டை ஆட்சி செய்வதற்காக மக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு அதிகாரத்தை கொடுத்துள்ளனர். தேர்தல் வாக்குறுதிகள் என்பது அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான உடன்படிக்கை. நாம் புரட்சி செய்வதன் நோக்கம் கூடிய அதிகாரங்களை கைப்பற்றுவது அல்ல.

**கேள்வி: அப்படியானால் எதற்காக போராடுகின்றீர்கள் ?**

மக்கள் ஆணைக்கு இணங்க செயல்படுமாறே நாம் கேட்டுக்கொள்கின்றோம். மக்களுக்களுடன் இணைந்து வழங்கியுள்ள கடப்பாடு முக்கியமானதாகும். மக்கள் என்னை தெரிவு செய்யவில்லை எனின் ஜனாதிபதியாலும்கூட என்னை அமைச்சர் ஆக்கி இருக்க முடியாது. அந்த வகையில் அமைச்சர் என்ற வகையில் ஒவ்வாருவருக்கும் உள்ள பொறுப்பையும் விட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலான பொறுப்புக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அரசாங்கம் மக்கள் ஆணைக்கு புறம்பாக செயற்பட்ட தருணங்களில் மாத்திரமே நாம் போராட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

**கேள்வி: நீங்கள் நடத்திய பேராட்டங்கள் சாதகமான பலனைத் தந்ததா?**

20 ஆவது அரசியலமைப்பு திருத்தில் காணப்பட்ட சில ஏற்பாடுகள் மக்கள் அணைக்கு புறம்பானவை என நாம் போராட்டத்தை மேற்கொண்டோம். ஜனாதிபதியும் அதனை ஏற்றுக்கொண்டு திருத்தங்களை மேற்கொண்டார்.

தமிழில் சேகு

அத்துடன், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் து றைமுக அதிகாரியினால் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் என நாம் கோரிக்கை விடுத்தோம். சுபீட்சமான நோக்கு கொள்கை பிரகடனத்தின் 58 ஆவது பகுதியில் அந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கம் மக்கள் ஆணைக்குப் புறம்பான பாதையில் பயணிக்கும் போது அதற்கு எதிராக போராடி அரசாங்கத்தை மக்கள் ஆணைக்கு இணங்க கொண்டு செல்வது எம்முடைய பொறுப்பாகும். நாம் மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளோம். அரசாங்கம் மக்கள் ஆணைக்கு எதிராக செயற்பட்டால் நானும் விமலும் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவோம் என மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளோம். அதனையே நாம் நிறைவேற்றுகின்றோம்.

**கேள்வி: கிடைக்கப்பெற்ற மக்கள் ஆணையை நடைமுறைப்படுத்தாமல் தடுப்பது யார்? ஜனாதிபதியா? பிரதமரா?**

அதனுள்ளேதான் தீப்பிடிக்கும் காரணங்கள் காணப்படுகின்றன. ஆம். அரசாங்கத்தினுள் சில பிரபலங்கள் மக்கள் ஆணைக்கு புறம்பான தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். அதற்கு எதிராக நாம் உள்ளார்ந்த போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம். இந்நிலையில் உள்ளே மேலும் தீப்பரவல் ஏற்படுவதை தடுப்பதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளது.

**கேள்வி: உங்களுக்கு எவருடனும் முரண்பாடு உள்ளதா ?**

எனக்கு யாரிடமும் தனிப்பட்ட முறையில் எந்த கருத்து முரண்பாடுகளும் இல்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் கொள்கைகள் தொடர்பான சிக்கல் நிலைமை இருந்த போதிலும் நான் தனிப்பட்ட முறையில் அவர்களுடன் நல்ல உறவு முறையையே பேணி வருகின்றேன். ஆகவே, எமக்கு மக்கள் ஆணை தொடர்பிலேயே சிக்கல் நிலைமை காணப்படுகின்றது. தங்கையை காட்டி அக்காவை கொடுத்தது போன்று பழைய அரசாங்கத்தின் கொள்கைகளையே இந்த அரசாங்கமும் பின்பற்றுமாயின் பழைய அரசாங்கத்தின் ஆட்சியே நாட்டில் இருந்திருக்கலாம். கடந்த அரசாங்கத்தின் கொள்கைகளை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளாததனாலேயே அந்த அரசாங்கத்தை மக்கள் வீட்டுக்கு அனுப்பினர்.

**கேள்வி: அவ்வாறாயின் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லையா ?**

வாக்குறுதிகள் சில நிறைவேற்றப்படுகின்றன. இருப்பினும் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படவேண்டும். அதுவே எங்களுடைய போராட்டமாகும்.

**கேள்வி: நீங்கள் இவ்வாறு போராட்டம் செய்யும் போது ராஜபக்ஷ குடும்பத்தை யாராலும் பிளவு படுத்த முடியாது என ஜனாதிபதி கூறினார் . அது உங்களுடைய போராட்டத்திற்கு கொடுக்கப்பட்ட பதிலடி இல்லையா?**

நான் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டேன். அது பதிலடியா என என்னிடமல்ல ஜனாதிபதியிடமே வினவவேண்டும். நான் அவ்வாறு கூறவில்லை. ராஜபக்ஷ குடும்பத்தை பிளவுபடுத்துவது எம்முடைய தேவைப்பாடு அல்ல. அதற்கான ஏற்பாடுகளும் இல்லை. ஆகவே, அதற்கும் எமக்கும் தொடர்பு இல்லை. அது எமக்கு கூறப்பட்டகருத்து என எண்ணப்போவதும் இல்லை.

**கேள்வி: இந்த போராட்டத்தை வெற்றிகொள்ள முடியும் என எண்ணுகின்றீர்களா?**

இதுவரையில் நாம் மேற்கொண்ட போராட்டங்கள் வெற்றிகாணப்பட்டுள்ளன. 20 வருடங்களுக்கு முன்னர் விடுதலை புலிகள் அமைப்பை இல்லாதொழிக்க முடியாது என கூறியபோது நாம் முடியும் என கூறியிருந்தோம். அது நிஜமாகியது. அந்த பேராட்டத்தை எடுத்து நோக்கும் போது இந்த போராட்டம் மிகவும் சிறியதாகும்.2015 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்தன. உலகில் பலம் வாய்ந்தவர்கள் அதற்கு ஆசி வழங்கின. அத்தகைய அரசாங்கத்தையே நாம் வெற்றி கண்டுள்ளோம்.

**கேள்வி: இத்தகைய சில்லறை சண்டைகள் இறுதியில் அரசாங்கத்தை விட்டு வெளியேற வழிவகுக்குமா?**

அரசாங்கத்திலிருந்து வெளியில் தள்ளப்பட்டால் நாம் வீழ்வது மக்களின் மடியில்தான். ஆகவே, அப்படி ஆனால், எமக்கு ஆதரவு கிடைக்கப்பெறும்.

**கேள்வி: அரசாங்கத்தின் சிறிய கட்சிகள் கூறுவதை கேட்டு ஆட முடியாது என சிறிலங்கா பொதுஜன பெரமுன கூறுகின்றதே?**

அரசாங்கம் கட்சிகள் கூறுவதை கேட்டு ஆட வேண்டிய அவசியம் இல்லை. மாறாக மக்கள் கூறுவதன்படியே ஆட வேண்டும்.

**கேள்வி: நீங்கள் பெரிய கதைகளை கூறினாலும் பிவிதுரு ஹெல உறுமையில் நீங்கள் மாத்திரமே இருப்பதான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றதே?**

நான் மிக குறைந்தளவான நிதி செலவிலேயே தேர்தல் பிரசார நடவடிக்கைளை மேற்கொண்டிருந்தேன். இருப்பினும் லட்சக்கணக்கான விருப்பு வாக்குகள் எனக்கு கிடைக்கப்பெற்றன. மக்கள் எம்மை நம்பியுள்ளனர். அந்த நம்பிக்கைக்கு விலைமதிப்பில்லை. அதனை இல்லாமலாக்க சிலர் முயற்சிக்கின்றனர். 2015 இல் ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்திலிருந்து செல்ல தயாரானபோது ஜனாதிபதி, பிரதமர் கடின முயற்சி எடுத்தனர். நானும் டலஸ் அழகப்பெருமவும் இணைந்து அவர்களுடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்தோம். ஆனால் அந்த இணக்கப்பாட்டை பிளவுபட செய்து அரசாங்கத்தின் பிரபல்ய மானோர் ஹெலஉறுமய சென்றால் 25 ஆயிரம் வாக்ககளே இல்லாமல் போகும் என கூறினர். இறுதியில் அரசாங்கம் இல்லாமல்போனது .

**கேள்வி: விமல் வீரவன்ச உள்ளிட்ட தரப்பினருடன் இணைந்து இரட்டை பிரஜைவுரிமைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதன் நோக்கம் என்ன ?**

பிரபல்யமான கொள்கை பிரகடனத்தின் காரணமாகவே . இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்களில் பக்கச்சர்பற்ற தன்மை தொடர்பில் சிக்கல் நிலைமை தோன்றும். நாட்டை நேசிப்பவர் ஆயின் எமது நாட்டிற்கு சார்பானவராகவே இருக்க வேண்டும். அவர் எதனையும் செயல்படுத்துவார் ஆயின், இலங்கைக்கு சாதாரகமான வகையிலேயே செயற்பட வேண்டும். இரட்டை பிரஜைவுரிமை உடையவர்கள் நாட்டில் இருக்கலாம். அர்ஜூன் மகேந்திரனுடைய பிரச்சினைக்கு பின்னரே இந்த விடயம் முக்கியத்துவம் பெற்றது. பிரதான சந்தேக நபர் நாட்டை விட்டு தப்பி சென்றுள்மையினாலேயே மத்தியவங்கி பிணைமுறி மோசடி தொடர்பான வழக்கு விசாரணைகளை முன்னோக்கி கொண்டு செல்ல முடியவில்லை. இரட்டை பிரஜைவுரிமையின் காரணமாகவே அவரால் மறைந்து வாழக்கூடிய நிலைமை காணப்படுகின்றது. அதன் காரணமாகவே இரட்டை பிரஜாவுரிமை உடையோர் நாட்டினுடைய முக்கிய பதவிகளை வகிப்பதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம்.

**கேள்வி: சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருடன் கலந்துரையாடலில் நீங்கள் உள்ளிட்ட தரப்பினர் ஈடுபட்டதன் நோக்கம் என்ன?**

எமது அரசியல் கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் இத்தகைய கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையியல் இம்முறை சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கலந்துரையாடல் இடம் பெற்றது. இது சிறீலங்கா சுதந்திரக்கட்சியுடன் மாத்திரம் இடம் பெற்ற கலந்துரையாடல் அல்ல.

**கேள்வி: அந்த கலந்துரையாடலின் போது மே தினக் கூட்டத்தை தனித்து நடத்துதல் தொடர்பில் பேசப்பட்டதா?**

மே தினக்கூட்டத்தை தனித்து நடத்துதல் தொடர்பில் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய கட்சிகள் மாகாணசபை தேர்தல் தொடர்பில் மேற்கொள்ளும் தீர்மானத்திற்கு அமைய இது குறித்த இறுதி தீர்மானம் எடுக்கப்படும்.

**கேள்வி: பிரதமர் தலைமையில் இடம் பெறவுள்ள கட்சி தலைவர்கள் கூட்டத்தில் நீங்களும் யோசனையை முன்வைப்பீர்களா ?**

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள மகாண சபை சட்டமூலம் பலவீனமானதோர் ஆவணமாகும். இந்த சட்ட வரைபு சட்டத்தரணியொருவரால் தயாரிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. இதனை செயற்படுத்துவதில் குறைபாடுகள் பல காணப்படுகின்றன. இது தொடர்பில் கட்சி தெளிவுபடுத்தும். சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்ட வரைவு மக்கள் ஆணைக்கு விரோதமானதாகும். விருப்பு வாக்கு முறைமை இல்லாதொழிக்கப்படும் என ஜனாதிபதி தன்னுடைய கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். ஆகவே, இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயம் அதற்கு புறம்பானதாகும்.

**கேள்வி: இவ்வாறாயின் இந்த சட்டமூலத்தை தயாரித்தது யார் ?**

விடயதானங்களுக்குப் பொறுப்பான அமைச்சரான ஜனக பண்டார தென்னக்கோன் அதனை அமைச்சர வைக்குச் சமர்ப்பித்தார். அவரிடம்தான் அந்த சட்ட வரைவு எங்கிருந்து கிடைத்ததென கேட்டுப்பார்க்க வேண்டும்.

# புலமைச் சிகரம்


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**46**

## 2016 - (6,10,20,23,34)

20. தேகாரோக்கியத்துடன் இருக்கும் ஒரு யானைக் கூட்டத்தில் உள்ள யானைகளின் தந்தங்களினதும் கால்களினதும் கூட்டுத்தொகை 132 ஆகும்.
அக்கூட்டத்தில் உள்ள யானைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
1. 22 2. 32 3. 66


23. A,B,C,D என்னும் ஒவ்வொரு முக்கோணியிலும் உள்ள மிகப் பெரிய இலக்கத்தைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகச் சிறிய எண் யாது?
1. 9765 2. 5679 3. 2348





34. 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும் போது இலக்கம் 2 எத்தனை தடவைகள் எழுதப்படவேண்டும்?
1. 10 2. 19 3. 20

## 2017 - (14,18,23,32,33,40)

14. 1 தொடக்கம் 25 வரையுள்ள எல்லா ஒற்றை எண்களையும் எழுதும் போது இலக்கம் 1 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
1. 7 2. 8 3. 13

18. 

பின்வரும் உருவில் கமலன் உட்பட 20 மாணவர்கள் வட்டமாக அமர்ந்திருக்கும் விதம் காட்டப்பட்டுள்ளது.
அவர்கள் எல்லோரும் கமலனிலிருந்து முறையே 1,2,3,1,2,3 ........... எனக் கூறியவாறு வட்டத்தைச் சுற்றி இரு தடவைகள் எண்ணுகின்றனர். இவ்வாறு முதற் சுற்றில் 1 எனக் கூறி எண்ணும் கமலன் இரண்டாம் சுற்றில் எண்ணும் போது கூறும் இலக்கம் யாது?
1. 1 2. 2 3. 3


23. 

இவ்வுருவில் ஆறு பக்கங்களும் A,B,C,D,E,F எனக் குறிக்கப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் மூன்று நிலைகள் உள்ளன.

மேற்குறித்த தாயக்கட்டையில் D எனக் குறிக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரேயுள்ள பக்கத்தைக் காட்டும் எழுத்து யாது?
1. A 2. B 3. F


32. Δ x ❑ = 60 ஆகவும் Δ - ❑ = 7 ஆகவும் இருப்பின், Δ + ❑ இன் பெறுமானம் யாது?
1. 15 2. 16 3. 17

33. இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.
343 ❑ 7 = 7 ❑ 7
1. + , x 2. + , x 3. x , ÷

40. 
இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
1. 10 2. 11 3. 12

## 2019 - 05,38

05. கீழே தரப்பட்டுள்ள கோலம் தொடர்ந்து செல்லும் போது ஆறாம் இடத்தில் வரத்தக்க அட்டையைத் தெரிவுசெய்க.




**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# நாட்டை காட்டிக்கொடுக்கும் எந்த முடிவுக்கும் இடமில்லை

## அமைச்சர் பிரசன்ன உறுதி



கொழும்பு,ஏப்.20

30 ஆண்டுகால யுத்தத்தின் பின்னர் பிரிவினை வாதத்தை தோற்கடித்த தலைவர்கள் ஆட்சியில் இருக்கும்போது நாட்டைக் காட்டிக்கொடுக்கும் எந்தவொரு முடிவுக்கும் இடமில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் நாட்டின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை சிறிதும் பாதிக்க அனுமதிக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆட்சிக்கு வரும் ஓர் அரசாங்கம் நாட்டைப் பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் முடிவுகளை எடுக்கும்போது, சக்திவாய்ந்த நாடுகள் தலைவர்களை மாற்றவும் ஆட்சியை மாற்றவும் நடவடிக்கை எடுக்கின்றன என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இவ்வாறான நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டிலும் இடம்பெற்றன என தெரிவித்த அவர், இலங்கை போன்ற நாடுகள் வளர்ச்சியடைவதை சக்திவாய்ந்த நாடுகள் விரும்பவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். அப்போதைய பிரேமதாஸ அரசாங்கம் தான் ஒரு தனி மாகாணத்தை உருவாக்க தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பணம் மற்றும் ஆயுதங்களை வழங்கியது என்றும் பிரசன்ன குற்றம்சாட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# இயற்கை முறை விவசாயத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஏப். 20

இயற்கை முறையான விவசாயத்தை மேம்படுத்தும் நோக்குடன் நஞ்சற்ற உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் முறையில் இயற்கை முறையில் உற்பத்தி செய்வதற்கான 7 வகையான தானியங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிளிநொச்சி ஜெயபுரம் கடல் தொழிலாளர் சங்க சமாச நிலையத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

30 இளைஞர்களுக்கு இயற்கை முறையான விவசாயத்தை மேம்படுத்தும் நோக்குடன் நஞ்சற்ற உணவுகளை பெற்றுக்கொள்ளும் முறையில் இயற்கை முறையில் உற்பத்தி செய்வதற்கான தானியங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர்கள், கிராம அமைப்புக்களின் தலைவர்களும் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணியின் தலைவர்களும் பங்குகொண்டனர்.

# தந்தை செல்வா நினைவுதின நிகழ்வில் கௌரவம் பெறும் பெருந்தகைகள்



தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படும் தந்தை செல்வா நினைவுதின நிகழ்வு இவ்வருடம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் (பண்டத்தரிப்பு மகளிர் பாடசாலைக்கு அருகில்) எதிர்வரும் 26.04.2021 திங்கட்கிழமை மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரை நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு யாழ்.மாவட்ட தந்தை செல்வா மன்றத் தலைவர் சி. மகேந்திரன் தலைமை ஏற்பார். பிரதம விருந்தினராக இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கலந்து சிறப்பிப்பார். விசேட அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் சிறப்பு விருந்தினர்களாக ஆ. ஆறுதிரு முருகன் (தலைவர் ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம் - தெல்லிப்பழை) நடனேந்திரன் (வலி.மேற்கு பிரதேசசபை தவிசாளர்) கலந்து கொள்வர்கள்.

இந்நிகழ்வில் சமூகத்துக்கு ஆற்றிய பணிகளுக்காக பின்வருவோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஈ .சரவணபவன் - உதயன் முகாமைத்துவப் பணிப்பாளர், சு. மகாலிங்கசிவம் - ஈழநாடு பிரதம ஆசிரியர், ஆ. சபேஸ்வரன் - யாழ் தினக்குரல் ஆசிரியர், திருமதி அ. மாலினி - டான் ரீ.வி. அலைவரிசை பிரதானி, சூ. சேவியர் குலநாயகம் - இலங்கை தமிழரசுக் கட்சி, அ. ஜெபநேசன் - வலி.தென் மேற்கு பிரதேசசபை தவிசாளர், ஏ. சச்சிதானந்தன் - வலி மேற்கு பிரதேசசபை உதவித்தவிசாளர், க. கணேசலிங்கம் - கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை உறுப்பினர், செ. மயில்வாசன் - துணுக்காய் வலயக் கல்வி அதிகாரி, சி. கிருபாகரன் - வேலணை மத்திய கல்லூரி அதிபர், கலாநிதி டி.எஸ். சொலமன் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், திருமதி கு. மலர்விழி - பண் டத் தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர், திருமதி. தே. சேபமாலைநாயகி - பண் டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர், யோசவ் எட்வேட் பங்கிராஸ் - மாதகல் சென்யோசப் மகாவித்தியாலய அதிபர், பா.பாலசுப்பிரமணியம் - சித்தன் கேணி ஸ்ரீ கணேஷ வித்தியாசாலை அதிபர், ம. நடேசானந்தன் - மன்னார் சிவபூமி இந்து இளைஞர் மன்ற செயலாளர், செ. சிவசுப் பிரமணியம் - ரெலிகொம், சு. ரட்ணவேல் - ஆசிரியர் செ. ரமேஷ் -

இதற்கான ஒழுங்குகளை மன்றச் செயலாளர் செல்வரட்ணம், நிர்வாகச் செயலாளர், திருமதி ஆனந்தி, பிரதித் தலைவர் திருமதி கோமதி, லயன் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# துறைமுக நகரம் சீன வசமானால் இலங்கை போர் களமாக மாறும்

## ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.20

**கொழும்பு துறைமுக நகரத்துக்கான உரிமம் நாட்டு மக்களைச் சார்ந்ததாகும். அதனை சீனாவுக்கு வழங்குவதன் மூலம் இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளின் எதிர்ப்புக்களை இலங்கை சந்திக்க நேரிடும். இதனால், ஏற்படக் கூடிய போரில் எமது நாடே போர்க்களமாக மாறும். எமது துறை முகங்களில் சீனப் போர் கப்பல்களை நிறுத்தி வைக்க கூடும். எனவே, இவ் வாறான விடயங்கள் குறித்து அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் அரசாங்கம் உண்மையை மறைக்கும் வகையிலேயே செயல்பட்டுள்ளது. விடுமுறை தினங்களைக் கருத்தில் கொண்டு இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதன் மூலம் இது தெளிவாகியுள்ளது.

இந்நிலையில், இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அது நாட்டின் சுயாதீனத் தன்மைக்குப் பெரும் அச்சுறுத்தலாகும் எனவும் தெரிவித்துள்ளது.

கொழும்பு - மருதானையில் அமைந்துள்ள சனசமூக கேந்திர மத்திய நிலையத்தில் இடம் பெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கத்தினரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ரயிலில் மோதி மூன்று பேர் பலி!

கொழும்பு,ஏப்.20

ரயில்களில் மோதி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். நேற்று மட்டும் ரயிலில் மோதி மூவர் உயிரிழந்தனர் என அவர் தெரிவித்தார்.

பூஸ்ஸ மற்றும் கிங்தொட இடையேயான ரயில் பாதையில் 60 வயது நபர் ரயிலில் மோதி உயிரிழந்தார்.

இதேவேளை, புத்தளம் பகுதியிலிருந்து கொழும்புக்கு பயணித்த ரயிலில் மோதி 71 வயது நபரொருவர் உயிரிழந்தார். இதற்கிடையில், ஹபராதுவை பொலிஸ் பிரிவின் தல்பே, மிஹிரிபென்ன பகுதியில் ரயிலில் மோதுண்டு பெண் ஒருவர் உயிரிழந்தார். (எ)

# கொரோனாத் தொற்றால் யாழில் முதியவர் மரணம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மற்றுமொரு முதியவர் உயிரிழந்தார்.

இந்த மரணம் நேற்று முன்தினம் மாலை பதிவானது என யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு, வீரபத்திரர் ஆலயத்துக்கு அண்மையில் வசித்துவந்த 77 வயது மு.இராசலிங்கம் என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 03ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவருக்கு 05ஆம் திகதி கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, இதயப்பாதிப்பு தொடர்பிலான சிகிச்சைகளும் வழங்கப்பட்டுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

# கைது, தடுத்து வைத்தலுக்கு எதிராக இளம் கவிஞர் உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு,ஏப்.20

'நவரசம்' என்ற கவிதைத் தொகுப்பு புத்தகத்தை எழுதியமைக்காக கைது செய்யப்பட்டுள்ள அஹ்னாப் ஜஸீம் எனும் இளம் கவிஞர், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த கைதும் தடுப்புக் காவலும் சட்ட விரோதமானது எனக் கூறி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசமைப்பின் 17 ஆவது உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்படும் அரசமைப்பின் 126 அவது உறுப்புரைக்கு அமைய, வெள்ளவத்தையைச் சேர்ந்த சட்டத்தரணி செல்லையா தேவபாலன், அஹ்னாப் சார்பில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

எஸ்.சி.எப்.ஆர். 114- 2021 எனும் இலக்கத்தின் கீழ் உயர் நீதிமன்றில் பதிவு செய்யப்பட்டுள்ள இம்மனு தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி கனக ஈஸ்வரனின் கீழ் வாதங்கள் உயர் நீதிமன்றில் முன் வைக்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது.

பாதுகாப்பு செயலர் கமால் குணரத்ன, பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன டி அல்விஸ், குறித்த பிரிவின் வவுனியா கிளை பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் கே.கே.ஜே. அநுரசாந்த, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

26 வயது அஹ்னாப், கவிஞராகவும் ஆசிரியராகவும் செயல்படுவதாகவும் அவர், பேருவளை ஜாமியா நளீமியா கலாபீடத்தில் தனது கல்வியை நிறைவு செய்துள்ளதாகவும் மனுதாரர் சார்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த 2020 மே 16 அம் திகதி இரவு 8 மணியளவில், சிலாவத்துறை, பண்டாரவெளியில் அமைந்துள்ள வீட்டில் வைத்து 4 ஆம் பிரதிவாதியான வவுனியா ரி.ஐ.டி. கிளை பொறுப்பதிகாரியால் கைது செய்யப்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ளது. இதன் போது அவரது வீட்டிலிருந்து 50 இற்கும் அதிகமான நவரசம் கவிதை தொகுப்பு புத்தகங்களும் மேலும் சில புத்தகங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலில் கோட்டை நீதிமன்றிலுள்ள பீ 13101- 19 வழக்கு தொடர்பில் அஹ்னாப் கைது செய்யப்பட்டதாக கூறப்பட்டாலும், கடந்த மார்ச் 3 ஆம் திகதி பிரதி சொலிசிற்றர் ஜெனரால் திலீப பீரிஸ் கோட்டை நீதிமன்றின் குறித்த வழக்கில் அஹ்னாப் சந்தேகநபரில்லை என நீதிமன்றில் அறிவித்திருந்தார்.

எனினும் அவருக்கு எதிராக புதுக்கடை நீதிவான் நீதிமன்றிலுள்ள வழக்கொன்று தொடர்பில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்வதாக பிரசாந்த ரத்நாயக்க எனும் ரி.ஐ.டி.யின் உப பொலிஸ் பரிசோதகர் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது என மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நிலையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கவிஞர் அஹ்னாப், தடுப்புக் காவலில் பெரும் பாலான நேரங்களில் கைவிலங்கிட்டே வைக்கப்பட்டுள்ளதாகவும், நித்திரைக்கு செல்லும் நேரம் கூட அவ்வாறன நிலையிலேயே அவர் வைக்கப்பட்டுள்ளதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் கைது செய்யப்படும் போது கூறப்பட்ட காரணத்தை விட, தற்போது, பேருவளை ஜாமியா நளீமியா கலாபீடத்தில் அடிப்படைவாதம் போதனை செய்யப்பட்டதாக ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றினை வழங்குமாறு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் அஹ்னாபை சித்திரவதை செய்வதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தடுப்புக்காவலில் உள்ள அஹ்னாபை அங்கு எலி கடித்துள்ளதாகவும் அவருக்கு முறையான சிகிச்சைகள் கூட அளிக்கப்படவில்லை என அம்மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# போதைப்பொருள் குற்றச்சாட்டு 20 பேர் தொடர்ந்தும் மறியலில்

கொழும்பு,ஏப்.20

போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 20 பேரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. இவர்களுள் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் 16 அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர்.

இந்த நபர்களை மே மாதம் 03 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நேற்று உத்தரவிட்டார். (எ)

# அரசமைப்புக்கு முரணற்ற வகையில் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்

## அரசுக்கு எதிர்க்கட்சி ஆலோசனை

கொழும்பு,ஏப்.20

இலங்கையின் அபிவிருத்தியில் கொழும்பு துறைமுக நகர வேலைத்திட்டம் முக்கிய பங்கை வகிக்கிறது. எனவே, இந்த முக்கியத்துவம் மிக்க வேலைத்திட்டத்தை நாட்டின் சட்டத்துக்கு உட்பட்ட வகையிலும், அரசமைப்புக்கு முரணற்ற வகையிலும் முன்னெடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு தொடர்பான முதலாவது சட்டமூலம் நல்லாட்சி அரசாங்கத்தில் 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

எனினும், அரசியல் சூழ்ச்சி காரணமாக அந்த செயல்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன. அதன் பின்னர் 2019 ஒகஸ்ட் - செப்ரெம்பருக்கு இடைப்பட்ட காலத்தில் முதலில் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட மூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மீண்டுமொரு சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் காணப்பட்ட விடயங்களை உள்ளிடக்கியே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட குழுவினால் கடந்த ஆண்டு ஜூனில் மற்றொரு சட்டமூலம் சமர்ப்பிக்கப் பட்டது.



ஆனால், தற்போது ஜனாதிபதியால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட மூலங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகிறது.

அதில் துறைமுக நகர ஆணைக்குழுவின் செயல்பாடுகள் பாராளுமன்றத்திற்கும் அரசியலமைப்பிற்கும் அப்பாற்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமனத்திலும் ஜனாதிபதி தன்னிச்சையாக செயல்படக் கூடிய நிலைமையே காணப்படுகிறது.

கொழும்பு துறைமுக நகரத்தில் உலகின் பிரதான நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளை நிறுவும் எதிர்பார்ப்பு காணப்படுகிறது.

ஆனால், பாராளுமன்றத்துக்கும் சட்டத்துக்கும் அப்பாற்பட்ட ஆணைக்குழுவின் செயல்பாடுகள் காரணமாக இந்த எதிர்பார்ப்பு பூர்த்தியாகுமா என்பது சந்தேகத்துக்குரியதாகும் என அவர் தெரிவித்தார். (எ)

# புதிதாக 797 தேசிய பாடசாலைகள்

கொழும்பு,ஏப்.20

நாட்டில் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரத்து 170 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடு பூராகவும் தற்போது 373 தேசிய பாடசாலைகள் உள்ளன. இதன் பிரகாரம் புதிதாக 797 தேசிய பாடசாலைகள் அமைக்கப்படவுள்ளன.

இதன்முதல் வேலைத்திட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி சியம்பலாண்டுவ மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது முதல் கட்டத்தில் 125 பாடசாலைகள், தேசிய பாடசாலைக் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் தேசிய பாடசாலைகளின் கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படும் சகல பாடசாலைகளுக்கும் இணையத்தளம், ஸ்மார்ட் வகுப்பறை உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. (எ)

# பருவநிலை மாற்ற கட்டுப்பாடு; அமெரிக்கா - சீனா ஒப்பந்தம்!

ஷங்காய், ஏப். 20

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் பரஸ்பரம் ஒத்துழைப்பு அளிக்க அமெரிக்காவும் சீனாவும் ஒப்பந்தத்தில் இணைந்துள்ளன.

இந்த விவகாரம் தொடர்பில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையில் சர்வதேச தலைவர்களின் மெய்நிகர் மாநாடு வரும் வியாழக்கிழமை தொடங்கவுள்ளது. இந்நிலையில், பருவநிலை மாற்றத்துக்குக் காரணமாக கரியமில வாயுவை உலகிலேயே மிக அதிக அளவில் காற்றில் கலக்கும் இந்த இரு நாடுகளும் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன.

இது குறித்து இரு நாடுகளும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில்,

கரியமில வாயுவின் வெளியேற்றத்தை குறைப்பதன் மூலம் பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் சர்வதேச முயற்சியில் பரஸ்பரம் ஒத்துழைப்பு அளிக்க அமெரிக்கா, சீனா ஒப்புக்கொண்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் சுற்றுச்சூழல் விவகாரங்களுக்கான சிறப்புத் தூதர் ஜோன் ஹெரியும் சீனாவின் சுற்றுச்சூழல் விவகார தூதர் ஜீ ஷென்ஹூவாவும் ஷங்காய் நகரில் கடந்த வாரம் நடைபெற்ற இரண்டு நாள் பேச்சின்



போது இதற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டனர்.

பருநிலை மாற்றப் பிரச்னை மிகவும் அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டியது அவசியம். அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த விவகாரத்தில் ஒத்துழைப்புடன் செயல்பட இரு நாடுகளும் அந்த ஒப்பந்தத்தில் உறுதியளித்துள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

புவி குளிரில் உறையாமல் பாதுகாத்து, அதனை அதனை வெப்பமாக வைத்திருக்கும் கரியமில வாயுவின் விகிதம், தொழில்புரட்சி காரணமாக வளிமண்டலத்தில் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக புவியின் வெப்பம் அதிகரித்து, பாலை நிலங்களின் பரப்பு அதிகரித்து வருகிறது. அனல் காற்று, காட்டுத் தீ சம்பவங்கள், பனிப் பாறைகள் உருகி கடல் மட்டம் அதிகரித்தல், வளிமண்டலப் போக்கு மாறுவதால் அதீத மழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்து வருகின்றன.

"பருவநிலை மாற்றம்" என்றழைக்கப்படும் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக சர்வதேச நாடுகள் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த 2015ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டன. அதில், இந்தப் பிரச்னைக்குக் காரணமான கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உலக நாடுகள் ஒப்புக் கொண்டன. இதுதொடர்பான தொடர் சர்வேதச முயற்சியின் ஒரு பகுதியாக, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமையில் சுமார் 40 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச பருவநிலை மாநாடு வரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறவிருக்கிறது.

அதற்கு முன்னதாக, வளிமண்டலத்தில் கலக்கப்படும் கரியமில வாயுவில் சுமார் 50 சதவீதத்தை வெளியிடும் அமெரிக்காவும் சீனாவும், இந்த விவகாரத்தில் பரஸ்பரம் ஒத்துழைப்பு அளிப்பதற்கான ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளன. (ஐ)



## தென்னாபிரிக்காவில் தீ பரவல்: பழமையான கட்டடங்கள் அழிவு!

கேப்டவுன், ஏப். 20

தென்னாபிரிக்காவின் கேப்டவுனிலுள்ள ரேபிள் மலை தேசிய பூங்காவில் தீ பரவலால் பேரழிவு ஏற்பட்டுள்ளது. இந்தத் தீயால் கேப்டவுன் பல்கலைக்கழகத்தின் பழமைமிக்க கட்டடங்கள் அழிவடைந்துள்ளன. இதேநேரம், இந்தத் தீ பரவலால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அரசியல்வாதியான சிசில் ரோட்ஸ் நினைவுச்சின்னம் அருகே ஞாயிற்றுக்கிழமை காலை ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக தீ பரவல் ஏற்பட்டது. இதனால் அங்கிருந்த உணவகமொன்று தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

கேப்டவுன் பல்கலைக்கழகத்தின் வரலாற்று சிறப்புமிக்க நூலகம், மோஸ்டெர்ட்ஸ் காற்றாலை மற்றும் பிற கட்டிடங்களும் தீயால் சேதமடைந்துள்ளன.

அந்தப் பகுதியில் வசிப்பவர்களுக்கு காற்றில் கரும்புகை மற்றும் தூசுதுகள்கள் பரவும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை மூடி வைக்குமாறு கூறப்பட்டுள்ளது. தீயை அணைக்கும் பணியில் நான்கு ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளதோடு, 200 தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்நிலையில், இரண்டு தீயணைப்பு வீரர்கள் காயமடைந்து, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

வறட்சி மற்றும் காய்ந்த புதர்கள் காரணமாக காட்டுத்தீ வேகமாகப் பரவி வருகிறது. தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர மூன்று நாட்கள் தேவைப்படும் என தீயணைப்பு வீரர்கள் தெரிவித்துள்ளார்கள். (ஐ)



## கண்ணீருடன் கட்டி தழுவிய ஆஸி. - நியூஸிலாந்து மக்கள்!

ஹமில்ரன், ஏப். 20

ஒரு வருடத்திற்குப் பிறகு எந்த கட்டுப்பாடுகளும் இல்லாமல் நியூஸிலாந்து, அவுஸ்திரேலியாவும் தங்கள் எல்லைகளை திறந்துள்ளன.

இதுகுறித்து சர்வதேச ஊடகங்கள் தரப்பில், "கொரோனா பாதிப்பு நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் குறைந்துவிட்டது. இதனைத் தொடர்ந்து இரு நாடுகளிலும் எந்த கட்டுப்பாடுகளின்றி எல்லைகள் திறக்கப்பட்டுள்ளன. தனிமைப்படுத்துதல் போன்ற கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் விமான நிலையங்களில் இரு நாட்டை சேர்ந்தவர்களும் கண்ணீருடன் கட்டி தழுவி அணைக்கும் காட்சிகள் நிரம்பி வழிகின்றன" என்று செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக 2020 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கொரோனா பரவல் தீவிரமாக இருந்ததைத் தொடர்ந்து நியூஸிலாந்து - அவுஸ்திரேலிய எல்லைகள் கட்டுப்பாடுகளுடன் மூடப்பட்டன.

கடந்த சில மாதங்களாக கொரோனா பாதிப்பு குறைவாக இருந்த நாடுகளில் கொரோனா பரவல் மீண்டும் வேகம் எடுக்கத் தொடங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளும் கொரோனா தடுப்பூசி செலுத்துவதில் முனைப்பு காட்டி வருகின்றன.

உலகம் முழுவதும் சுமார் 13 கோடிக்கும் அதிகமானவர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 கோடிக்கும் அதிகமானவர்கள் கொரோனா விலிருந்து குணமடைந்துள்ளனர். (ஐ)

## இங்கிலாந்து பிரதமர் ஜோன்சனின் இந்தியப் பயணம் மீண்டும் இரத்து!

லண்டன், ஏப். 20

கொரோனா பரவல் காரணமாக இங்கிலாந்து பிரதமர் பொறிஸ் ஜோன்சனின் இந்தியப் பயணம் மீண்டும் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்து பிரதமர் பொறிஸ் ஜோன்சன் கடந்த ஜனவரி மாதம் இந்தியா செல்வதாக இருந்தது. இந்திய குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க இருந்தார். ஆனால், இங்கிலாந்தில் கொரோனா பரவல் திடீரென அதிகரித்ததால், அவரது வருகை இரத்தானது.

இந்தநிலையில், இந்த மாத இறுதியில் அவர் இந்தியா செல்லவிருந்தார். ஆனால், தற்போது இந்தியாவில் கொரோனா 2ஆம் அலை தாக்கம் உச்சமாக



இருப்பதால் அவரின் பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

அவரின் பயணம் இரத்தானமையை பிரதமரின் அலுவலகம் நேற்று உறுதி செய்தது. அத்துடன், மெய்நிகர் கூட்டத்தை நடத்துவதற்கு இரு நாடுகளும் தீர்மானித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## எகிப்தில் ரயில் விபத்து 11 பேர் பலி! 100 பேர் காயம்

எகிப்தில் பயணிகள் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 11பயணிகள் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

எகிப்து வட ஆப்பிரிக்காவின் மிக பழமையான மற்றும் மிகப்பெரிய ரயில் இணைப்புகளில் ஒன்றாகும். இங்கு அடிக்கடி ரயில் விபத்துகள் ஏற்படுவதுண்டு.

கெய்ரோவில் இருந்து நைல் டெல்டா நகருக்கு சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் ஒன்று கலியோபியா மாகாணத்தில் ரயில் தடம் புரண்டு விபத்தில் சிக்கியது. இதில் 11 பேர் பலியானார்கள். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு சென்ற 50 அம்புலன்ஸ்கள் காயம் அடைந்த பயணிகளை மருத்துவமனைகளுக்கு ஏற்றிச் சென்றன. விபத்து குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக எகிப்தின் ரயில் போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது. (ஐ)

## சிறை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் நவால்னி!

மொஸ்கோ, ஏப். 20

ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் நவால்னி சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். கடந்த 20 நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி வரும் நவால்னி ஆபத்தான நிலையில் இல்லை என்று அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தனக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும் என்று கோரி சிறையில் அடைக்கப்பட்டுள்ள நவால்னி கோரி வந்தார். ஆனால், அவருக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று ரஷ்ய அரசு மறுத்திருந்தது.

இதையடுத்து அவர் சிறையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தைத் தொடர்ந்தார். இதைத் தொடர்ந்து அவருக்கு ஆதரவாகப் போராட்டங்களும் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், நவால்னியின் உயிருக்கு பாதிப்பு ஏற்படின் அதற்கு ரஷ்யா பதிலளிக்க வேண்டும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

நச்சு தாக்குதல் மூலம் நவால்னியை கொல்ல ரஷ்ய அரசு முயன்றதாக



குற்றச்சாட்டு உள்ள நிலையில், ஜேர்மனியில் சிகிச்சை பெற்ற நவால்னி நாடு திரும்பிய நிலையில் பிணை விதிகளை மீறினார் என்ற வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடக்கு மக்கள் கொரோனா தொடர்பில் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்!

## யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஏப்.20

**கொரோனா தொடர்பில் மக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியம் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.**



யாழ். மாவட்ட கொரோனா நிலைமைகள் தொடர்பில் அவர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வட மாகாணத்தைப் பொறுத்தவரை கொவிட் - 19 தொற்று அதிகரித்து வருகின்றது. இதேபோல யாழ். போதனா வைத்தியசாலையில் கொரோனா தொற்றால் நேற்றும் (நேற்றுமுன்தினம்) இன்றுமாக (நேற்று) இரண்டு மரணங்கள் ஏற்பட்டுள்ளன. இதில், 77 வயது, 59 வயது நபர்களே இவ்வாறு மரணமாகினர். அவர்கள் சில காலமாக நோய்வாய்ப்பட்டு இருந்து யாழ். போதனா வைத்தியசாலையின் விசேட பிரிவில் தகுந்த கண்காணிப்புக்குள் இருந்தவர்கள். அவர்கள் கொவிட் தொற்று காரணமாக நேற்றும் (நேற்றுமுன்தினம்) இன்றும் (நேற்று) மரணமாகி இருக்கின்றார்கள்.

எனவே, இது தொடர்பில் மக்களின் விழிப்புணர்வு மிக அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் நமது வைத்தியசாலையில் பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை செய்திருக்கின்றோம். உதாரணமாக இப்பொழுது நமது வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை பெறுபவர்களுக்கு சத்திரசிகிச்சை கூடத்திற்கு செல்வோர் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை செய்த பின்புதான் அவர்களை சத்திர சிகிச்சைக்கான அனுமதிக்கின்றோம்.

அதேபோல, விபத்து பிரிவில் வருபவர்கள் உடனடியாக சத்திரசிகிச்சை செய்ய வேண்டி இருப்பின் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட பின்னரே சிகிச்சைக்காக சேர்க்கிறோம். அந்த வகையில் தினமும் 75 தொடக்கம் 100 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

இதேபோல் நாளாந்தம் 400 பேருக்குரிய பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்தோடு எமது வைத்தியசாலையில் விடுதிகளில் 5 நாட்களுக்கு மேல் தங்கி இருக்கும் நோயாளிகளுக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்து இருக்கின்றோம். இதன்மூலம் நமது வைத்தியசாலையை கொரோனா தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுத்து இருக்கின்றோம். பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவையாக இருக்கின்றது.

பொதுவாக நோயாளர்களை பார்வையிட வருபவர்களின் எண்ணிக்கையினை குறைந்து இருக்கின்றோம். அதில் மக்கள் தமது கணிசமான ஒத்துழைப்பினை வழங்குகின்றார்கள். மேலும், இன்னும் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது வைத்தியசாலை ஒரு முக்கியமான இடம் இவ்வாறான இடத்தில் கொவிட் தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே, வைத்தியசாலை நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். (ஐ)





# பிரதமர் அலுவலகத்தின் பணிகள் ஆரம்பம்

கொழும்பு,ஏப்.20

தமிழ் - சிங்கள புத்தாண்டை தொடர்ந்து பிரதமர் அலுவலகத்தின் பணிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முற்பகல் அலரி மாளிகையில் ஆரம்பமாகின.

இதன்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டார். பிரதமர் அலுவலக ஊழியர்களும் புத்தாண்டில் தமது பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக பிரதமரிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டமை விஷேட அம்சமாகும்.

இந்நிகழ்வில், போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே, பிரதமரின் செயலாளர் காமினி செனரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, மேலதிக செயலாளர்கள், சிரேஷ்ட உதவி செயலாளர்கள் உள்ளிட்ட பிரதமர் அலுவலக ஊழியர்கள் மற்றும் பிரதமரின் கீழுள்ள அமைச்சுக்களின் ஊழியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (எ)

# நாய்க்கடிக்கு இலக்கான பெண் ஒரு மாதத்தின் பின் உயிரிழப்பு!

## அராலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 20

கட்டாக்காலி நாய்க்கடிக்கு இலக்காகிய குடும்பப்பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

அராலி தெற்கைச் சேர்ந்த விஜயகுமார் பத்மா (வயது-55) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

“கடந்த மாதம் 16ஆம் திகதி கட்டாக்காலி நாய் ஒன்று குடும்பப் பெண்ணை கடித்துள்ளது.

அவர் தனியார் வைத்தியசாலையில் தடுப்பூசி போட்டுள்ளார்.

இந்த நிலையில் கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை அவருக்கு மூச்சு எடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி கடந்த சனி மாலை உயிரிழந்தார்” என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.



# கரோலின் ஜூரிக்கு பிணை

கொழும்பு,ஏப்.20

திருமதி உலக அழகி கரோலின் ஜூரி மற்றும் மொடல் சூலா பத்மேந்திர ஆகியோர் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 05 ஆம் திகதி இடம்பெற்ற திருமதி அழகி இறுதிப் போட்டியின் போது இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த இருவரும் கறுவாத் தோட்டம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின் பின் பொலிஸ் பிணையில் இந்த இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, திருமதி உலக அழகி கரோலின் ஜூரி மற்றும் மொடல் சூலா பத்மேந்திர ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகிய நிலையில், இவர்கள் இருவரும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டனர். (எ)

# முல்லைத்தீவில் தங்களுக்குள் மோதிய சிங்கள மீனவர்கள்!

## ஒருவரின் விரல் துண்டானது

முல்லைத்தீவு, ஏப். 20

முல்லைத்தீவு -நாயாறு பகுதியில் அமைந்துள்ள சிங்கள மீனவர்களின் வாடியில் இரு குடும்பங்களுக்கு இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் மோதலாக மாறி கத்தி வெட்டில் முடிந்துள்ளது. கடந்த சனிக்கிழமை மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புத்தளம்,மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் இங்கு வாடி அமைத்து தொழில் செய்து வருகின்றனர். இவர்களில் புத்தளம் கலாவத்தை பகுதியைச் சேர்ந்த 41 அகவையுடைய மீனவர் கைவிரல் ஒன்று துண்டாடப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கத்தியால் வெட்டிய ,மன்னாரை சேர்ந்த நபரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.


# மரண அறிவித்தல்



## அருந்தவம் கருணாதேவி

யாழ்.மானிப்பாய் ஆனந்தா வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட அருந்தவம் கருணாதேவி அவர்கள் 06.04.2021 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், அருந்தவம் சின்னையா அவர்களின் அன்பு மனைவியும், கிருபாகரன்(கிருபா), கிருபரஞ்சினி, தயாபரன் (பாபு), சன்சலா(பவர்), சுவிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், ரதி, றொபின்சன், சாந்தி, சந்திரமோகன், சதீஸ் ஆகியோரின் மாமியாரும் கெங்காகுலரத்தினம், காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் தர்மகுலசிங்கம், குணசிங்கம், அமரசிங்கம் ஆகியோரின் சகோதரியும் செரின்டன், அதிசயா, திஷான், கிருஷாந், லூர்த்திகா, விகாஷ், வர்சிகா, லசஷ்யா, சபீனா, சாகித்தியன், சன்சிகள், சன்சிகா, சங்கீவ் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**கிருபா (மகன்)** - +33664838323


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# அச்சுறுத்தல்களுக்கு ஒருபோதும் நான் அடிபணியப்போவதில்லை!

## விஜயதாஸ எம்.பி. சூளுரை

**கொழும்பு,ஏப்.20**

**ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய 69 இலட்சம் மக்களுக்கும் இந்த அரசாங்கம் துரோகமிழைத்துள்ளது. எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் உரிமை கட்சிக்கு உண்டு, நாட்டில் சட்டம் உள்ளது. அனைத்து சவால்களையும் சட்டத்தின் ஊடாக வெற்றி கொள்ள முடியும். அச்சுறுத்தல்களுக்கு நான் ஒருபோதும் அடிபணியப்போவதில்லை என ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு மகா சங்கத்தினர் ஆசிர்வாதமளித்தனர். கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் விஷேட மத வழிபாடுகள் இடம்பெற்றன. இவ்வழிபாட்டைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

சட்டம் தொடர்பில் தெளிவில்லாதவர்களே கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் குறித்து கருத்துரைக்கின்றனர். அனைத்து சட்டமூலங்களும் அரசமைப்புக்கு முரணானது அல்ல என சட்டமா அதிபர் குறிப்பிடுவார். அவரது கருத்தை நீதிமன்றில் சவாலுக்குட்படுத்துவோம். கடந்த காலங்களில் பாராளுமன்றில் கொண்டு வரப்பட்ட காணி சட்டமூலம் அரசமைப்புக்கு உட்பட்டது என சட்டமா அதிபர் குறிப்பிட்டார்.

காணி சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது என உயர்நீதிமன்றில் வாதிட்டேன். இச்சட்டம் அபாயகரமானது எனக் குறிப்பிட்டேன். அனைத்து வாதப் பிரதிவாதங்களையும் ஆராய்ந்த உயர்நீதிமன்றம் காணி சட்டமூலத்துக்கு அனுமதி வழங்கவில்லை. காணிச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்று நடுத்தர விவசாயிகள் பல நெருக்கடிகளை எதிர்நோக்கியிருப்பார்கள்.

எனக்கு எதிராக கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இதற்கு கட்சிக்கு முழு உரிமை உண்டு. நாட்டில் சட்டம் உள்ளது. அனைத்துச் சவால்களையும் சட்டத்தின் ஊடாக வெற்றிகொள்ள முடியும்.

கொழும்பு துறைமுக நகரத்தை ஒப்பந்த அடிப்படையில் பிறதரப்பினருக்கு வழங்க வேண்டிய அவசியம் கிடையாது.

அத்தோடு, கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய சட்டமூலத்தை இரகசியமான முறையில் நிறைவேற்றவே அரசாங்கம் முயற்சித்தது. அதற்காகவே கடந்த 12 ஆம் திகதி திங்கள்கிழமை அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. நீதிமன்ற நடவடிக்கைகள் ஏதுமின்றி சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் வகுத்த திட்டம் தோல்வியடைந்துள்ளது.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு என்மீது பல குற்றச்சாட்டுக்கள் தற்போது முன்வைக்கப்படுகின்றன.

இவற்றை ஒருபோதும் பொருட்படுத்தப் போவதில்லை. நாட்டின் தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு வழங்க நாட்டு மக்கள் இடமளிக்கக்கூடாது. தேசிய வளங்கள் அந்நிய நாட்டவர் வசமானால் இலங்கை மக்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்படும்- என்றார். (எ)

## இலங்கை ரூபா பெறுமதி பாரியளவில் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.20

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி பாரியளவில் அதிகரித்துள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று வீதத்துக்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 187.93 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று வீதத்துக்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 191.97 ரூபாவாக பதிவாகியுள்ளது. (எ)



## அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக மொஹான்

கொழும்பு,ஏப்.20

சிரேஷ்ட ஊடகவியலாளரான மொஹான் சமரநாயக்க, அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக தனது கடமைகளை நேற்றுக் காலை பொறுப்பேற்றுக்கொண்டார். (எ)

# கூட்டமைப்பின் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் விமர்சனம்

ஏறாவூர்,ஏப்.20

கடந்த காலத்திலே எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்கின்ற விடயத்திலே கவனம் செலுத்தினார்களே தவிர தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயற்சிக்கவில்லை என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.



பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் செங்கலடி - பதுளை வீதி பிராந்தியத்துக்கான மக்கள் பணிமனை அலுவலகத்தை கரடியனாறு பிரதேசத்தில் நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எம்மைப் பொருத்தளவுக்கு கிழக்கு மாகாணத்தில் இரு வலிமையான அரசியல் கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

இந்தக் கட்டமைப்பினூடாக எமது மக்களுக்கான தேவைகளை, அபிவிருத்திகளை நிச்சயமாக பெற்றுக்கொடுக்க வேண்டும். நீண்டகாலமாக புரையோடிப் போய் கிடக்கின்ற மக்களின் பிரச்னைகளை அர சாங்கத்தோடு இராஜதந்திரமாக பேசித் தீர்க்க வேண்டும்.

கடந்த காலத்திலே எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்கின்ற விடயத்திலே கவனம் செலுத்தினார்களே தவிர தமிழ் மக்களின் பிரச்னைகளையோ அவர்களின் பிரச்னைக்கான தீர்வையோ பெற்றுக்கொடுக்க முயற்சிக்கவில்லை- என்றார். (எ)



## பெண் உறுப்பினர்கள் இடையில் மஹரகம நகர சபையில் மோதல்

### ஒருவர் காயம்! ஒருவர் கைது!!

கொழும்பு,ஏப்.20

மஹரகம நகரசபை பெண் உறுப்பினர் ஒருவருக்கு தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் குறித்த நகர சபையின் மற்றுமொரு பெண் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட பெண் உறுப்பினரை நுகேகொடை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலுக்குள்ளான உறுப்பினர் தற்போது ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# வவுனியாவில் காட்டு யானை தாக்கி இரண்டு பிள்ளைகளின் தந்தை பலி!

வவுனியா,ஏப்.20

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கப்பாச்சி கிராமத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி இரண்டு பிள்ளைகளின் தந்தை பலியானார்.

கப்பாச்சிக்குளத்தின் கீழ் உள்ள வயல் வெளியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்தத் துயரச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 48 வயது நளீம் என்பவர் கப்பாச்சிக் குளத்தின் கீழ் வயல் காவலுக்கு நேற்று முன்தினம் இரவு சென்றுள்ளார். இந்நிலையில் நேற்றுக் காலை 9 மணியாகியும் கணவர் வீடு திரும்பவில்லையென மனைவி வயல்வெளிக்குச் சென்றுள்ளார்.

இதன்போது குறித்த நபர் யானையின் தாக்குதலுக்குள்ளாகி சடலமாக காணப்பட்டார்.

அதன் பின்னர் அயலவர்களின் உதவியுடன் செட்டிக்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த செட்டிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## ஈஸ்டர்...

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் காரணமாக கத்தோலிக்க மக்கள் மாத்திரமல்லாது இந்து பௌத்த முஸ்லீம், மலே மக்களும் பாதிப்புக்குள்ளாகினர். இத்தகைய சம்பவம் மீண்டும் ஏனைய மதத்தவர்களுக்கும் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

இந்நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் உயிரிழந்தவர்களுக்காக எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 08.45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். அந்த வகையில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மக்களிடமும் மதத்தலைவர்களிடமும் இந்த மௌன அஞ்சலிக்கு ஒத்துழைப்பு வழங்கி எம்முடன் ஒன்றிணையுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். ஏனெனில் இது ஒரு தேசிய பிரச்னையாகும். மாறாக இது மதங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்தும் வகையிலான விடயம் அல்ல - எனவும் அவர் தெரிவித்தார்.

## அன்னை...

அன்னை பூபதியின் நினைவேந்தலை நடத்தக்கூடாது என்று தடை விதிக்கப்பட்ட நிலையில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணத்தில், பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக வளாகத்தில் அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

வவுனியாவில், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு பதில் கோரி 1520ஆவது நாளாக நேற்றுப் போராட்டம் நடத்தியவர்கள் அன்னை பூபதியை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பு - நாவலடியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அன்னை பூபதியின் நினைவிடத்துக்கு அண்மையாக அஞ்சலி செலுத்தினர்.

இதேபோன்று, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் அன்னை பூபதி மக்களால் நினைவுகூரப்பட்டார்.

போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தவும், புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தி அன்னை பூபதி 1988 மார்ச் 19ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டார். நீர் மட்டும் அருந்தி 31 நாட்கள் தொடர்ந்த அன்னை பூபதி அவரின் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில் ஏப்ரல் 19ஆம் திகதி உயிர் நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வு கூடத்தில் 350 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 7 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேர் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் இருவர் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்கள். ஏனைய நால்வர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது என்று கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ)

## தோல்வியில்...

கூட்டம் பிசுபிசுத்துப் போனது .

நேற்றைய கூட்டத்துக்கு மொட்டுக் கூட்டணியின் பிரதான பத்துக் கட்சிகளின் தலைவர்கள் மட்டுமல்லாமல், சிறிய சிறிய கட்சிகள், அமைப்புகள், குழுக்களைச் சேர்ந்த பல டசின் கணக்கானோரும் அழைக்கப்பட்டிருந்தனர் என்பதை அறிந்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றோர் அது குறித்து பிரதமரின் அலுவலக ஆளணி அதிகாரியான பிரதமரின் மகன் யோஷித ராஜபக்ஷவுடன் தொடர்புகொண்டு கேட்டனர்.

இதையடுத்து, பஸில் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் இவ்வாறு பலர் அழைக்கப்பட்டிருக்கின்றமையை யோஷித உறுதிப்படுத்தினர். இதன் பின்னர் நேரத்துடன் பிரதமரின் அலுவலக இல்லத்துக்கு வருகை தந்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார போன்றோர் பிரதமர் மஹிந்தவைச் சந்தித்துத் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துவிட்டு நேரத்துடன் வெளியேறியிருக்கின்றனர்.

எனினும், அவர்களுடன் வந்த சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் சிலர் இருந்து பிரதமருடன் பேசி விட்டுச் சென்றனர்.

ஆயினும், மொட்டுக் கட்சிக் கூட்டணியின் உள்வீட்டுக் குழப்பத்தைத் தீர்க்க நேற்று எடுக்கப்பட்ட கூட்ட முயற்சி பஸில் தலைமையில் பல சிறு கட்சிகள், அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றிய காரணத்தால் பிசுபிசுத்துப் போனது எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## செவ்வாய்க்....

தரையிறங்கும் வரை பயணத் திட்டம் எவ்வித குழப்பங்களும் இன்றி முழுமையான இலக்கை எட்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூமிக்கு வெளியே வேற்றுக் கிரகம் ஒன்றில் மனிதன் சாதித்துள்ள இன்றைய பறப்பு 1903 ஆம் ஆண்டு ரைட் சகோதரர்கள் பூமியில் நிகழ்த்திக் காட்டிய முதல் விமானப் பறப்பு முயற்சி போன்றதொரு சரித்திர நிகழ்வாகப் பதிவாகியுள்ளது.

ஹெலி பறக்கும் காட்சியின் கறுப்பு-வெள்ளைப் படம் ஒன்று செய்மதி வழியே தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துக்கு முதலில் கிடைத்தது என்றும், மேலும் பல வர்ணப் படங்களும் சிறிய வீடியோக்களும் சில தினங்களில் வெளியாகும் என்றும் நாசா தெரிவித்துள்ளது.

ஹெலி வெற்றிகரமாகப் பறந்த செய்தியை செவ்வாய் ஹெலிக்கொப்டர் திட்டத்தின் தலைமை முகாமையாளர் மிமி ஆங் தனது குழுவினரின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் அறிவித்தார்.

“வேற்றுக் கிரகங்களில் இயந்திரத்தால் இயங்கும் விமானங்களில் மனிதன் பறக்க முடியும் என்பதை இனி எங்களால் உறுதியாகக் கூறமுடியும்”- என்று அவர் குறிப்பிட்டார்.

‘புத்திக்கூர்மை’ எனப் பெயரிடப்பட்ட ரோபோ ஹெலி தரையில் இருந்து சுமார் மூன்று மீற்றர்கள் உயரம் எழுந்து, மிதந்து பின்னர் சுழன்று தரையிறங்குவதை காட்சிகள் காட்டுகின்றன என்று நாஸா அதன் ருவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளது.

பூமியின் வளிமண்டலத்தை விட பல மடங்கு அடர்த்தி குறைந்த மென்மையான செவ்வாயின் வாயு மண்டலத்தில் பறக்க வசதியாக ஹெலியின் விசிறிகள் வடிவமைப்பட்டிருந்தன. நிமிடத்துக்கு 2ஆயிரத்து 500 தடவைகள் சுழற்சி வேகம் கொண்டதாக அவை உள்ளன.

ஹெலி அதன் முதற் பறப்பைத் தொடர்ந்து எதிர்வரும் நாட்களில் மேலும் நான்கு பறப்புகளில் ஈடுபடுத்தப்படும். அதன் பின்னர் ஒரு மாத காலத்தில் அதன் சோதனைகள் அனைத்தும் நிறுத்தப்படும். அதன் பிறகு தாய்க்கலமான பெர்சிவரன்ஸ் ( Persev erance ) செவ்வாயில் உயிரின் சுவடுகளைத் தேடும் பணியில் முழுமையாக ஈடுபடும் என்று தெரியவருகின்றது. (ஐ)

## கொழும்பு...

சப்ரி குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுக நகரம் அரசாங்கத்துக்கு சொந்தமானது என்றும், அது குத்தகைக்கு விடப்படும் என்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

## வடக்கு...

விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவித்த கருத்துத் தொடர்பில் ஊடகங்களிடம் மாவை சேனாதிராசாவிடம் நேற்று கேள்வி எழுப்பின. இதற்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இதன்போது, அவர் மேலும் கூறியவை வருமாறு:

விக்னேஸ்வரன் கூறியதைப் பற்றி நான் பெரிதாகக் கவலைப்படவில்லை. ஏனென்றால், கடந்த காலங்களில்கூட 2013ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தலுக்கான திகதி குறிப்பிடப்படும் முன்னரே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மாவட்ட கிளைகள் தோறும் மாவை சேனாதிராசாதான் அந்த பொறுப்புக்கு வர வேண்டும் எனத் தீர்மானம் எடுத்திருந்தார்கள். எனக்கும் கூறினார்கள்

அதைவிட, அந்தக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நான்கு கட்சிகள் இருந்தன. அந்த நான்கு கட்சிகளும் மாவை சேனாதிராசாதான் முதலமைச்சர் வேட்பாளராக வர வேண்டும் எனத் தீர்மானித்திருந்தார்கள். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தலாம் எனப் பொதுவானவர்கள் பேசினார்கள். நான் அவர்களுக்கு சொல்லியிருந்தேன். நான் நிச்சயமாக இந்த விடயத்தில் போட்டியிடுவதா இல்லையா என்பதை தமிழ் தேசிய கூட்டமைப்பு தீர்மானிக்கும் என்று. ஆனால், என்னுடைய நிலைப்பாடு பதவிகளை பறித்துக் கொள்வதல்ல.

போராட்ட வழிகளில் இருந்து வந்த நான், 2009 ஆம் ஆண்டுக்குப் பின், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு - அரசு, இராணுவத்தால் போர் குற்றங்கள் இழைக்கப்பட்ட காரணத்தால் அந்த அரசாங்கம் இனப் பிரச்னைக்கான தீர்வை முன்வைக்கவில்லை. போர் காலத்தில் இடம்பெற்ற குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கவில்லை எனவே அந்த விடயங்களில் கூடிய கரிசனை செலுத்தி, வழக்குகளைத் தாக்கல் செய்து மக்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டங்களில் நான் ஈடுபட்டிருந்தேன்.

விக்னேஸ்வரனை தேர்தலில் நிறுத்துவது தொடர்பில் எமது மத்திய குழுவில் விவாதித்தபோது, அதிக நேரம் நான் தான் விவாதித்திருந்தேன் அவரை வேட்பாளராக நிறுத்துவோம் என்று. அவர் அந்தத் தேர்தலில் போட்டியிட்டு ஒரு இலட்சத்து 32 ஆயிரம் வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றார். ஆனால், இந்தமுறை பாராளுமன்ற தேர்தலில் 21 ஆயிரம் வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

அவர் தனிக்கட்சி ஆரம்பித்து அதன் மூலம் குறைந்தளவு வாக்குகள் பெற்று இருக்கின்றார். எனவே அதனை வைத்தே நாங்கள் பார்க்க முடியும் அவருக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கை. அவர் ஒரு கட்சியின் தலைவர் இன்னொரு கட்சியின் தலைவரை விமர்சிப்பது அவ்வளவு நாகரிகமாக விடயம் அல்ல என்பதே எனது கருத்தாகும். அவர் அதனை மாற்றிக்கொள்ள வேண்டும் - என்றார்.

2013ஆம் ஆண்டு நாங்கள் என்னை வேட்பாளராக நிறுத்தி இருந்தால் நான் விக்னேஸ்வரனை போல் வெற்றியடைந்திருப்பேன். எனினும், தற்போதைய நிலைமையில் என்னை வேட்பாளராக நிறுத்தினால் நான் அந்தப் பொறுப்பை ஏற்க தயாராக உள்ளேன். எனினும், தற்போதைய நிலையில் பல கட்சிகள், தற்போதைய அரசாங்கத்தின் நிலைமை போன்றவற்றைப் பரிசீலித்து ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி அதற்கு தகுந்த முடிவை நாங்கள் எடுப்போம் - என்றார். (ஐ-3)

## அழுத்தி...

பட்டதாகவும் தாம் சர்வதேச சக்திகளையும் வகாப்பிஸத்துடன் அவற்றிற்குள்ள தொடர்புகளையுமே குறிப்பிட்டதாகவும் கர்தினால் மேலும் தெரிவித்தார்.

“ என்னுடைய கருத்துக்கள் தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளன. இந்த நாட்டில் இஸ்லாமிய தீவிரவாதமோ அதன் விரிவாக்கமோ இல்லை என்று நான் ஒருபோதிலுமே குறிப்பிடவில்லை. நான் எந்தவொரு அரசியல் சக்தியைப் பற்றியும் குறிப்பிடவில்லை. நான் வகாப் பிஸம் பற்றியும் அதனை எப்படி சில சக்திமிக்க நாடுகள் பயன்படுத்திவருகின் றன என்பது பற்றியுமே பேசினேன்” என கத்தோலிக்க ஆயர்கள் சூழ்ந்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

‘“நான் எந்த உள்நாட்டு அரசியல் சக்திகளைப் பற்றியோ தலைவர்களைப் பற்றியோ’ குறிப்பிடவில்லை” என கர்தினால் மேலும் தெளிவுபடுத்தினார்.

நேற்று முன்தினம் பொரளையில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வொன்றில் கருத்துவெளியிட்ட கர்தினால் மல்கம் ரஞ்சித் “ஈஸ்டர் தாக்குதல்களானது மதத் தீவிரவாதம் அன்றேல் மதம் மீதுள்ள அதீத பற்றினால் நடத்தப்பட்டதொன்றாக நாம் காணவில்லை. மாறாக குறித்த அரசியல் சக்திகள் தமது அதிகாரத்தை நிலையை வலுப்படுத்துவதற்காக மேற்கொண்ட முயற்சியாகவே கருதுகின்றோம்.” எனத் தெரிவித்தார்.

அவரது கருத்துக்கள் தற்போது எதிர்க்கட்சியிலுள்ள ஒருசில தரப்பினரின் உணர்வலைகளை எதிரொலிப்பதாகக் காணப்பட்டது. தற்போதைய அரசாங்கத்திலுள்ள தரப்பினருடன் தொடர்புடைய சக்திமிக்க அரசியல் சக்திகளே இந்தக்குண்டுத்தாக்குதல்களை திட்டமிட்டதாக எதிர்க்கட்சியிலுள்ள சில தரப்புக்கள் அவ்வப்போது கருத்துக்களை வெளிப்படுத்திவந்துள்ளன.

கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்த கடும் தொனியிலான கருத்துக்களை கத்தோலிக்க திருச்சபை மறுதலித்த இரண்டாவது சந்தர்ப்பமாக நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பு அமைந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ம் திகதி தாக்குதல்களை நடத்திய குற்றவாளிகள் தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற விசாரணைகளில் போதிய முன்னேற்றம் காணப்படாமை அன்றேல் விசாரணை வினைத்திறன் வீரியமாக காணப்படாமை குறித்து அண்மைக்காலமாக கர்தினால் விரக்தியடைந்தவராக கடுந்தொனியில் கருத்துக்களை வெளிப்படுத்திவருகின்றதைக் காணமுடிகின்றது.

இம்மாத முற்பகுதியில் கோபத்துடன் கூடிய முகபாவனையோடு காணப்பட்ட கர்தினால் மல்கம் ரஞ்சித் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடுமையாக சாடியிருந்தார். மீண்டும் அதிகாரத்தைப் பிடிப்பதற்காக தேர்தலில் போட்டியிடப்போவதாக சிறிசேன கூறியமை குறித்து கருத்து வெளியிட்டிருந்த கர்தினால், சிறிசேன ஆடையை அணிந்துகொண்டா இப்படிக் கருத்து வெளியிடுகின்றார் என்று வினவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இலங்கை கத்தோலிக்க ஆயர் இல்லத்தின் தொடர்பாடல் பணிப்பாளரான அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ ,கர்தினாலின் கடுந்தொனியிலான கருத்துக்கள் எவர் மீதான தனிப்பட்டதோ அன்றேல் அரசியல் ரீதியானதான கருத்துக்கள் அல்ல என்று தெரிவித்தார். ‘ எவரையும் அரசியல் ரீதி யாக தாக்கும் நோக்கத்தை கர்தினால் எந்தச் சந்தர்ப்பத்திலும் கொண்டிருக்க வில்லை. ஈஸ்டர் தாக்குதல்களை நாம் தேசிய பேரனர்த்தமாக நாம் கருதுகின் றோம் . அந்த தாக்குதல்கள் தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்தன. அந்த அச்சுறுத்தல் தொடர்ந்தும் இருந்துகொண்டே உள்ளது.” என்று அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu



# ஐ.பி.எல். இருபது - 20 தொடர்: சென்னை அசத்தல் வெற்றி!

மும்பை, ஏப். 20

சென்னை சுப்பர் கிங்ஸிடம் 45 ஓட்டங்களால் வீழ்ந்தது ராஜஸ்தான் அணி.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்றிரவு நடந்த போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

மும்பையில் நடந்த நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தானின் சஞ்சு சாம்ஸசன் முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய்தார்.

இதனால், டோனியின் சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது. சென்னையின் எந்த வீரர்களும் அரைச் சதத்தை நெருங்காதபோதும், 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 188 ஓட்டங்களை எடுத்தது.

கெய்க்வாட், டூ பிளசிஸ் இணை தொடக்கம் கொடுத்தது. கெய்க்வாட் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்தார் மொயின் அலி. 17 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 33 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

மொயின் அலியுடன் ரெய்னா இணைந்த நிலையில், ஒரு பௌண்ட்ரி, 2 சிக்ஸர்களுடன் 26 ஓட்டங்களை எடுத்த அலி வெளியேறினார்.

தொடர்ந்து, ரெய்னா 18, ராயுடு 3 சிக்ஸர்களுடன் 27, ஜடேஜா 8, டோனி 18, சாம் கரன் 13, தாகூர் 1 என ஆட்டமிழந்தனர்.

ராஜஸ்தானின் பந்துவீச்சில் சேட்டன் சக்கரியா 3, கிறிஸ் மொறிஸ் 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

ராஜஸ்தான் அணிக்கு ஜோஸ் பட்லர், மனன் வோக்ரா தொடக்கம் கொடுத்தனர்.



வோக்ரா 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சஞ்சு சாம்சன் 1, அவரைத் தொடர்ந்து 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விளாசி 49 ஓட்டங்களை எடுத்த பட்லரும் ஆட்டமிழந்தார்.

சிவம் டுபே 17, டேவிட் மில்லர் 2, றியான் பராக் 3, ராகுல் தெவாட்டியா 20, மொறிஸ் 0, உனாட் கட் 24 என்று வேகமாக விக்கெட்கள் சாய்க்கப்பட்டன.

20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்த ராஜஸ்தான் அணி, 143 ஓட்டங்களையே பெற்றது. இதனால் சென்னை அணி 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சென்னையின் பந்துவீச்சில் மொயின் அலி 3 விக்கெட்களையும், சாம் கரன், ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# ரமழான் நோன்பிருந்தனர் வோர்ணர், வில்லியம்ஸன்



சென்னை, ஏப். 20

ஹைதராபாத் சன் ரைசஸ் அணி வீரர் ரஷீத் கானுடன் இணைந்து சக வீரர்களானவோர்ணர், வில்லியம்ஸன் ரமழான் நோன்பிருக்கும் காணொலி சமூக வலைதளங்களில் பிரபலமாகியுள்ளது.

ஐ.பி.எல். இருபது - 20 போட்டிகள் தற்போது நடக்கின்றன. இதில், ஹைதராபாத் அணிக்காக ரஷீத் கான் விளையாடி வருகிறார். இஸ்லாமியரான அவர், இது ரமழான் மாதம் என்பதால் நோன்பு நோற்கிறார். அவருடன் இணைந்து, சக வீரர்களான வோர்ணர், வில்லியம்ஸன் ஆகியோரும் நோன்பிருந்தனர்.

இது தொடர்பான காணொலியை ரஷீத் கான் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டிருக்கிறார். மத வேற்றுமைகளை மறந்து ரஷீத் கானுடன் இணைந்து நோன்பு இருக்கும் வோர்ணர், வில்லியம்ஸனுக்கு வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன. (ஐ)

# கோலியை முந்தினார் தவான்!



மும்பை, ஏப். 20

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் 50 ஓட்டங்களுக்கு மேல் பெற்றவர்களின் வரிசையில் தவான் விராட் கோலியை முந்தினார்.

தற்போது நடந்து வரும் ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் தவான் டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்காக விளையாடி வருகின்றார். நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அவர் 92 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன்மூலம் ஐ.பி.எல்லில் 50 முறைகளுக்கு மேல் ஓட்டங்களை எடுத்தவர்கள் வரிசையில் விராட் கோலியை முந்தி இரண்டாவது இடம் பிடித்தார்.

இந்தப் பட்டியலில், டேவிட் வோர்ணர் 49 அரைச்சதங்கள், 4 சதங்களுடன் 53 முறை 50 ஓட்டங்களுக்கு மேல் பெற்றுள்ளார். தவான் 43 அரைச்சதங்கள், 2 சதங்களுடன் 45 தடவைகளும், விராட் கோலி 39 அரைச்சதங்கள், 5 சதங்களுடன் 44 தடவைகளும் 50 ஓட்டங்களுக்கு மேல் பெற்றுள்ளனர். (ஐ)

# பிரெஞ்சு ஓப்பனில் பெடரர் பங்கேற்பார்

பேர்ண், ஏப். 20

இந்த ஆண்டுக்கான பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸில் ரோஜர் பெடரர் பங்கேற்பார் என்று அறிவித்துள்ளார்.

முன்னணி வீரரான ரோஜர் பெடரர் 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.



அவர், கடந்த வருடம் அவுஸ்திரே லிய ஓப்பனில் அரையிறுதியில் ஜொகோவிக்கிடம் தோல்வியடைந்தார்.

இந்தப் போட்டியில் காயமடைந்த அவர், அதற்காக இரு தடவைகள் சத்திர சிகிச்சைக்கு உள்ளாகினர். தற்போது, பூரண ஆரோக்கியத்துடன் இருக்கும் அவர் பிரெஞ்சு ஓப்பனில் பங்கேற்கவுள்ளாரென அறிவித்துள்ளார்.

பிரெஞ்சு ஓப்பன் எதிர்வரும் மே 30ஆம் திகதி ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப் பட்டது. எனினும், பிரான்ஸில் தொற்று பரவல் காரணமாக திகதி பிற்போடப்படலாம் என்பது குறிப்பிடதக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.